இராம இராச்சியம்

கைவல்யம்

பரிமளம் பதிப்பகம்

இராம இராச்சியம்

கைவல்யம்

அவர்களால் எழுதப்பட்டு

காஞ்சிபுரம்

"திராவிடநாடு" அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு,

பரிமளம் பதிப்பகத்தாரால்

வெளியிடப்பட்டது.

விலை பத்தணா. :: மே, 1949

எங்கள் நன்றி

"இராம இராச்சியம்!" வைதிக உள்ளங்களில் பழைமை விரும்பிகளால் எழுப்பப்பட்டு, அவர்களால் வியந்து பேசப்பட்டு வரும் அரசியலமைப்பின் எடுத்துக்காட்டு. குற்றம், கோணல், துன்பம் அற்ற நன்மை, நலம், இன்பம் பயக்கும் பேரரசே இராம இராச்சியம் என்று கூறி, மாசு மருவற்ற வெள்ளை யுள்ளங்களைப் பழம் பாசி படர்ந்ததாகச் செய்யும் கொடுமை தொன்றுதொட்டு நடைபெற்று வந்திருக்கிறது; இன்றும் நடைபெற்று வருகிறது. அந்தக் கொடுமையை வேரோடும், வேரடி மண்ணோடும் களைந்தெறிய வேண்டியே, தோழர் கைவல்யம், இச்சிறு நூலின் வாயிலாக, இராம இராச்சியத்தின் காரண காரியங்களைப் பகுத்தறிவு கொண்டு தெளிவுறுத்தி ஒவ்வொருவரையும் தம் சிந்தனை அறிவு கொண்டு சிந்திக்கச் சொல்கிறார். அந்த வாய்ப்பினைப் பொது மக்களுக்கு அளிக்கவேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு இச்சிறு நூலை வெளிக் கொண்டுவந்துள்ளோம்.

தோழர் கைவல்யம் தன்மான இயக்கத்தின் பெருந்திறல் வாய்ந்த கிழப்புலி. அறிவுப் போரிலே சீறிப் பாய்ந்து, வெற்றி கொண்டு வீறுடன் விளங்கும் தோலா மொழி அறிஞர். கல்வி யறிவோடு, அனுபவ அறிவும் குழைத்து ஊட்டப்படுவதால், இந்நூற் கருத்துக்கள் பெறற்கரிய சிறப்புடையனவாகும். நூலை வெளியிடும் உரிமையை எம் பதிப்பகத்திற்கு வழங்கிய தோழர் கைவல்யம் அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1—5—49 **பரிமளம் பதிப்பகத்தார்.**

காஞ்சிபுரம்

இராம இராச்சியம்

(1)

இராமாயணம் என்ற சொல்லைக்கேட்டவுடனே நம்மவர்களுக்கெல்லாம் பக்தியும் நீதியும் வந்துவிடுகிறது. அதிலும் பெருந்தலைவர்களே இராம இராஜ்யமென்று சொல்லுகையில் அதில் விசேடமில்லாமலா போகும் என்று பலர் நினைக்கலாம். அவர்களும் இராமாயணம் படித்துத்தான் இராமஇராஜ்யம் தெரிந்தார்கள்; நீங்களும் இராமாயணம் படித்திருக்கிறீர்கள். இராமாயணத்தைப் படித்து அதிலுள்ளவைகளை எல்லாம் அப்படியே தெரிந்த நம்முடைய பெரிய இராமாயணப் பண்டிதர்களும் இருக்கிறார்கள். நானும் இராமாயணம் படித்திருக்கிறேன். இராமாயணமும் உண்டானதற்குள்ள காரணமும், அதன் கர்த்தாக்களின் வரலாறுகளும், அதனால் உண்டான இராமஇராஜ்யத்தையும் சொல்லுகிறேன், சாவகாசமாகப் படியுங்கள், படித்தபின் ஆலோசியுங்கள், படித்தவர்களு மிருக்கிறார்கள், சிந்தனை சக்தியுடையவர்களும் இருக்கிறார்கள், உண்மைக்குப் பரிந்து பேசுகிறவர்களும் வந்து கொண்டே இருப்பார்கள்.

பல இராமாயணங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் முதல் இராமாயணம் வால்மீகம் என்கிறார்கள். புராணக் கற்பனைப் படி இராமாயணம் நடந்தகாலம் சொல்ல வேண்டுமானால் கைலாயம், வைகுண்டம், இந்திரலோகம், பிரம்மலோகம் ஆகியவைகளில் அரசாட்சி செய்த சிவன், விஷ்ணு, பிரம்மா முதலியவர்களின் கொடிவேலிப்பட்டிகைகளும் தெரியவேண்டும். காலம் சொல்லுவது, பண்டிதர் சேதுப்பிள்ளை போன்ற ஆராய்ச்சிப் பண்டிதர்களுக்குத்தான் அது சாத்தியம். நமக்கு அது சாத்தியமில்லை. திரேதாயுகத்தில் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அந்த யுகக் கணக்குப்படி பார்த்தால் பல இலட்ச வருடங்களாகின்றன.

இராட்சதர்களின் உபத்திரவத்தால் தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டார்கள். 'நான் இராமராக அவதாரம் செய்து இராட்சதர்களைச் சம்மாரம் செய்கிறேன்' என்று விஷ்ணு சொன்னார். அப்படியே அவதாரஞ் செய்து தேவர்களின் குறையைத் தீர்த்தார் என்று புராணிகர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு மேலும் விஷ்ணு இராமராக அவதாரம் பண்ணுவதற்குச் சைவ, வைணவ முக்கிய புராணங்களிலிருந்து காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தப் புராணங்களைச் சைவ, வைணவர்களோ, அதனதன் பண்டிதர்களோ தள்ளக்கூடாதவை; அந்தக் காரணங்கள் ஆபாசமானவை, அறிவிற்குப் புறம்பானவை. அது மட்டுமல்ல; மானம், மரியாதையை விரும்பும் சமயவாதிகள் வெளியில் சொல்லக்கூடாதவை, வெளியில் சொன்னால் ஆஸ்திகர்கள் வெட்கப்படக் கூடியவை. நம்முடைய முதன்மையான தெய்வங்களின் குணம், ஒழுக்கம், செய்கை முதலியவைகளைக் கேவலத்திலும் கேவலமாக எழுதப்பட்டிருக்கிறது. அதில் முக்கியமானதைக் கீழே எழுதுகிறேன். நம்முடைய தெய்வங்களையும், ரிஷிகளையும் தெரிந்து கொள்ளுங்கள். அதைச் சொல்லுகிற பண்டிதர்களையும் பாருங்கள்.

விஷ்ணுவும் இலட்சுமியும், வைகுண்ட அரண்மனையின் வாயிலுக்கு விஜயன், ஜெயன் என்கிற காவற்காரர்களைக் காவல் வைத்து, யார் வந்தாலும் உள்ளே விடாதீர்கள் என்று உத்தரவிட்டு அரண்மனையின் அந்தப்புரப் பள்ளியறைக்குக் காமலீலை செய்து களிக்கப் போனார்கள். அப்பொழுது பிரம்மாவின் புத்திரர்களான சனகாதி மகாரிஷிகள் உள்ளே போனார்கள். காவற்காரர்கள் தடுத்தார்கள். உடனே காவற்காரர்களை "நீங்கள் இராட்சதர்களாகப் போகக் கடவது" என்று ரிஷிகள் சாபம் கொடுத்தார்கள். இந்தச் சத்தம் கேட்டு விஷ்ணு வந்தார், ரிஷிகளை வணங்கினார். காவற்காரர்களால் சங்கதி தெரிந்தார். "பிராமண உத்தமர்களால் கொடுக்கப்பட்ட சாபத்தை யாராயிருந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும். என்னைக்கூட அதை மாற்றமுடியாது. ஆனதால் நீங்கள் இராட்சதர்களாகப் பிறவுங்கள். நான் இராம அவதாரம் எடுத்து உங்களைச் சம்மாரஞ்செய்து இங்கே அழைத்துக்கொள்கிறேன்" என்றார் விஷ்ணு. இந்தக் கதையின் ஒழுங்கு முறையைப் பார்த்தீர்களா? பிராமணர்களை எதிலும் தடுக்க யாருக்கும் நியாயமில்லை. சாபம்

கொடுத்தால் அதை நீக்கத் தனக்கே சக்தியில்லை என்று விஷ்ணுவே சொல்லிவிட்டார். பிராமணர்களை எதிலும் யாரும் தடுக்கக்கூடாது, அவர்கள் கொடுக்கும் சாபத்தை விஷ்ணுவால் கூடத் தடுக்கமுடியாது என்பதுவரையிலும்தான் புராணம் எழுதினவர்களுக்கு வேண்டும். அதுவரையிலும் ஜன சமூகத்துக்குத் தெரியப்படுத்தித் தெரிந்துகொண்டால்போதும். தெரிந்து கொள்ளவும், தெரியப்படுத்தவும் விஷ்ணுவைப் பூலோகத்துக்கு இராமராகக் கொண்டு வந்தும் ஆயிற்று. இராமாயணம் உண்டானதற்கு இந்தக் கதைதான் முதற் காரணம். அங்கிருந்துதான் இராமாயணம் உற்பத்தியாகிறது. அதற்காகவே அது எழுதப்பட்டது. இந்தக் கதை விஷ்ணு புராணத்தில் உள்ளது. இது வைணவர்களுக்கு முக்கிய சமய நூல்.

விருத்திராசூரன் என்கிற அதிபலவானான ஒரு இராட்சதன் இருந்தான். பிருந்தை என்கிற அவன் மனைவி மகா அழகும் சிறந்த கற்பும் உடையவள். அவளைக் கண்டு விஷ்ணு ஆசைப்பட்டான். பலதடவை சூரனிடம் சண்டை போட்டுத் தோற்றுப்போனார், பிருந்தையினுடைய கற்பும் சூரனுடைய பலமும் விஷ்ணுவின் ஆசைக்குத் தடையாக இருந்தன. விஷ்ணு இதைச் சிவபெருமானிடம் சொன்னார். சிவபெருமான் சூரனிடம் சண்டை போட்டு அவனைக் கொன்றார். விஷ்ணு செத்துப்போன சூரன் உடலில் புகுந்து பிருந்தையிடம் வந்து அவளுடைய கற்பைக் கெடுத்தார். பின் அதைப் பிருந்தை தெரிந்தாள் "அடே சண்டாள விஷ்ணுவே! துரோகி, அநியாயமாய் நீ என் கற்பைக் கெடுத்தாய். அதனால் நீயும் உன் பெண்சாதியும் பூலோகத்தில் மனிதர்களாகப் பிறந்து என் குலத்தவனான இராட்சதன் உன் மனைவியின் கற்பை அழிக்கக் கடவது" என்று சாபம் கொடுத்து, அக்கினியை மூட்டி அதில் விழுந்து சாம்பலானாள். விஷ்ணு, பிருந்தையின் ஆசையால் அந்தச் சாம்பலில் புரண்டுகொண்டு கிடந்தார். சிவபெருமானின் பெண்சாதி தன் அண்ணன் படும் அவஸ்தையைக் கண்டு தன் பணிப் பெண்களில் துளபம் என்கிற பெண்ணை அனுப்பிச் சோகத்தைத் தீர்க்கவைத்தாள். இது எங்கே? எப்பொழுது நடந்தது? வேதக் கடவுளுக்கும் இராட்சதப் பெண்ணுக்கும் பொருத்தம்

சரியா? தேவர்களும் இராட்சதர்களும் பங்காளிகளாயிற்றே? இதன் தத்துவார்த்தம் என்ன? தெய்வங்களின் திருவிளையாடல் அல்லவா? இதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆங்கிலம் படித்து ஆராய்ச்சியில் தேர்ந்த நமது பெரிய சைவ வைணவப் பண்டிதர்களுக்குத் தெரியலாம். விஷ்ணுவைத் தாழ்வுபடுத்தச் சைவர்கள் எழுதின கதையாக இருந்தாலும், விஷ்ணு செய்த அக்ரமத்துக்குச் சிவனும் உடந்தை என்பதும் அந்தக் கதையில் இருக்கிறது. இராமர் உற்பத்திக்கும் இராமாயணம் உண்டானதற்கும் சைவர்கள் சொல்லும் காரணம் இந்தக் கதை. இது சைவ புராணங்களில் முக்கியமான கந்தபுராணத்தில் இருக்கிறது.

பிரம்மா, ரிஷி, முனி என்பவை, பெயரில் வித்தியாசமே ஒழிய அர்த்தமும் கருத்தும் பிராமணன் என்பதையே குறிக்கும். நாரத மகரிஷி என்று எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதிகாச புராணங்களை எழுதிவிட்டு அவைகளிலுள்ள ஒட்டை, மேடு பள்ளம், கூட்டல், குறைத்தல் முதலியன சரிப்படுத்திக் காட்ட வேண்டியதற்கு உண்டாக்கப்பட்டவர் நாரதர். தெய்வலோகத்திற்கும் பூலோகத்திற்கும் சஞ்சாரஞ் செய்து தெய்வங்கள், தேவர்கள், இராஜாக்கள் முதலியவர்களுக்கு உலகத்திலுள்ள அழகான பெண்களின் வரலாறுகளைக் கூறுவதும், சமயம் கிடைத்தால் தானும் கலியாணம் செய்து கொள்வதும் அவர் தொழில். அந்த நாரதர் உலகம் சுற்றிவருகையில் ஒரு தேசத்தில் ஒரு இராசா மகளுக்கு சுயம்வரம் நடக்கப் போகிறது, அந்தப் பெண் மகா அழகு என்று தெரிந்தார். அவளைக் கலியாணம் செய்துகொள்ள நினைத்தார். ரிஷியின் அழகு அதற்கு ஏற்றதல்ல என்று உணர்ந்து உடனே மகாவிஷ்ணுவிடம் வந்தார். சங்கதியைச் சொல்லி அவர் அழகைக் கொடு என்று கேட்டார். விஷ்ணு தன் அழகைக் கொடுத்து முகத்தை மட்டும் குரங்கு முகமாகச் செய்துவிட்டார். நாரதரும் விஷ்ணுவும் சுயம்வரத்திற்குப் போனார்கள். குரங்கு முகத்தோடிருந்த நாரதரை அப்பெண் பார்த்துச் சிரித்துவிட்டு, அழகாயிருந்த விஷ்ணுவிற்கு மாலை போட்டாள். விஷ்ணு அப்பெண்ணை அழைத்துக்கொண்டு வைகுண்டம் போனார். நாரதர் அதிக கோபமடைந்து விஷ்ணுவிடம் சென்று "நான்

ஆசைப்பட்ட பெண்ணை, என்னை மோசஞ் செய்து நீ கொண்டு வந்து விட்டதால் இந்த வைகுண்டத்தையே தும்சம் செய்து உன்னையும் நாசம் செய்து விடவேண்டும். அதற்குப் பதிலாக நீயும் உன் மனைவியும் பூமியில் மனிதர்களாகப் பிறந்து உன் மனைவியை அன்னியன் அபகரித்துப் போகட்டும்! நீ எனக்குக் கொடுத்த குரங்கு முகமே உனக்கு உதவி புரியட்டும்" என்று சாபம் கொடுத்தார். இந்தக் கதை பிராமண சாபத்தின் மகிமையைத் தெரியப்படுத்தவே எழுதியது. கதை இருக்கட்டும். அதிலுள்ள குற்றம், தெய்வ கடாட்சத்தின் பேரிலும், ரிஷிகள் தபசின்பேரிலும் நின்றுவிடும், மிஞ்சி நிற்பது பிராமண சாபம் தானே! அதைத்தானே சூத்திரர்களுக்குப் பண்டித சாஸ்திரிகள் உபதேசம் செய்யவேண்டும்! இராமாயணத்திற்கும் இராம அவதாரத்திற்கும் இந்தக் கதையே ஆதிகாரணம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய கதைகளை ஆதாரமாகவுடைய இராமாயணமும், இராம இராச்சியமும் எத்தன்மையுடையதாயிருக்க வேண்டும்? எதற்காக எழுதப்பட்டது? என்பதை ஆலோசித்துப் பாருங்கள். "புராணங்களை எல்லாம் நாங்கள் நம்புவதில்லை, பொய்யென்றே நினைக்கிறோம். யார்தான் இந்தக் காலத்தில் நம்புகிறார்கள்? இதை ஏன் கைவல்யம் எழுதிக்கொண்டே இருக்கிறார்" என்று நீங்கள் சொல்லலாம். புராணத்தைப் பொய்யென்று நினைத்தீர்களே அல்லாமல் புராணத்துள் இருப்பவைகள் மெய்யாகவே இருக்கின்றன. பொய்யான புராணத்துள் இருக்கும் பொய்யான பிராமணனும் தெய்வங்களும் மெய்யாகவே நம் நடு வீட்டிற்குள் விளங்கிக்கொண்டிருக்கின்றன, சொப்பனம் பொய்யானால் அதில் கண்ட பொருளும் பொய்தானே? சொப்பனத்தில் கண்ட பொருள் மெய்யென்கிற பாவனையில் சொப்பனம் பொய் என்பதில் என்ன விசேடம் இருக்கிறது?

(2)

வாசகர்களே! வாலிபர்களே! மரத்தின் கிளை, கொம்பு, சல்லி வேர் அறுபட்டாலும் ஆணிவேர் அறுபட்டால்தான் அடிமரம் சாயும். நீங்கள் படித்திருக்கலாம். நான் எழுதுவதையும் படித்து நீங்கள் தெரிந்து கொண்டதுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். அதில்

நஷ்டம் ஒன்றுமில்லை. மனுஷிய அபிவிருத்தி என்ற பாதையில் நாமும் ஒரு பாதை கண்டு பிடித்திருக்கிறோம். அந்தப் பாதையில் நடப்பதற்குப் பிராமண தருமமும் புராண நியமமும் வழிநெடுகத் தடைகளாக வரும். அந்தத் தடைகளைப் பல தலைமுறைகளாக நமக்குரிய செல்வம் என்றெண்ணியும், தொழில் செய்தும், இன்புற்றும், தொழுதும் வந்திருக்கிறோம். அவைகள் நம்முடைய இரத்தத்தில் கலந்திருக்கின்றன, சதைக்குள்ளும் இருக்கிறது. நாம் நடக்கும் பாதைக்குக் குறுக்கே வந்துகொண்டிருக்கும். அவைகளைப் பழம் கந்தைத்துணி என்று நீங்கள் கழற்றி எறியவே புராணக் கதை எழுதுகிறேன்.

அன்பர்களே! இராமராச்சியத்தைப்பற்றி எழுதுவதாகச் சொன்னேன். எழுதுவதென்றால் மலைபோலச் சங்கதிகள் மனதில் குவிந்து விடுகின்றன. எதை எழுதுவது, எதை விடுவது! எல்லாவற்றையும் உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்கிற ஆசையும் முன்னால் நிற்கிறது. கிழ வயதின் சோர்வும் உண்டாகிறது. என் கற்பனையல்ல, கதையல்ல. ஏட்டிலுள்ளதும், எங்கும் நிறைந்து நிற்பதுமானதை மட்டும் எழுதினாலும் பல வியாசங்களாகும். அவைகள் பரீட்சைக்குப் படிப்பதல்ல, மண்டையிலேற்றி மறைத்து வைத்துப் பரீட்சைக்கு எழுதும் விடையுமல்ல. படித்து ஆலோசித்து உண்மையை உணர்ந்து நடக்கும் குணத்தில் பொருந்த வேண்டியவை. நாம் ஒன்று சேருவோம். மனம் ஒன்றுபடட்டும், பெரியார் சொன்ன வழி நல்லவழி, நம்முடைய வழி நியாயமான வழி, அந்த வழி நம்மை எல்லாம் சரியான இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். பலகாலமாக நம்மிடையே வந்துசேர்ந்த பிழைபாடுகள் எல்லாம் ஓடிவிடும். நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய சமய, சாதி ஆச்சாரங்கள் நமது பரஸ்பர அன்பினால் பறந்துவிடும். நம்மில் உயர்ந்த சாதி என்றும், ஆச்சாரிகளென்றும், அபிநயித்துக் கொண்டிருக்கும் குருக்கள், ஓதுவான், தேசிகன், பண்டாரம் முதலியவர்களைப் சற்சூத்திரர்கள் என்று இராமாயணம் சொல்லும். அவர்கள் நம்முடன் சேரவோ, தோள் கோர்த்து நிற்கவோ வந்தாலும் வரட்டும். வராவிட்டாலும் அவர்களிடம் துவேஷமோ,

கோபமோ, வேண்டாம். நாம் போகும் வழியில் அவர்களுடைய பாவனைகள் எல்லாம் மாண்டு மடிந்துபோகும். வீரர்களே உலகத்தில் பெரும் காரியங்களைச் செய்கிறார்கள். பயந்தவர்களும் உலகத்தில் இருப்பார்கள். கட்டையில் கோடரி வெட்டு ஒரே இடத்தில் விழவேண்டும். வெட்டுச் சிதறினால் கட்டை உடையாது, விறகுமாகாது. ஆனதால் ஒரே இடத்தில் எல்லோரும் அடிப்போம்.

இராமாயணம் உண்டானதற்கும், விஷ்ணு இராம அவதாரம் எடுத்ததற்கும் உள்ள மூல காரணங்களைச் சொன்னேன். இப்பொழுது இராமாயணம் உண்மையாக உண்டானதையும், அதன் இராச்சியாபாரங்களையும் சொல்லுகிறேன். எல்லாம் கற்பனைக் கதைகள்தான். புத்திசாலிக்கூட்டம், மடையர் கூட்டத்தை அடக்கி ஆளச் செய்தவைகள்தான். ஆங்கிலம் படித்து பி. எ. பி. எல்., எம். எ. எல். டி., பரீட்சை கொடுத்துப் பல அறிவாளிகள் எழுதின ஆங்கிலப் புத்தகங்களையும் படித்துத் தமிழும் படித்துப் புலவர்களான நம் பெரிய பண்டிதர்களே மகாவிஷ்ணுவும் இலட்சுமியும் வைகுண்டத்தில் பள்ளியறையில் படுத்துக்கொண்டதையும், விஷ்ணு, சூரன் மனைவியின் கற்பை அழிக்கச் சிவபெருமான் தன் பராக்கிரமத்தைக் காட்டினார் என்பதையும் நம்பிப் பிரசங்கம் செய்கையில், அந்தக் காலத்து மக்கள் இராமாயணத்தை நம்பினதில் ஆச்சரியமில்லை. இராமாயணத்தைக் கற்பித்தும், கவி இன்பம் கண்டும், காவியப் பெருமை பேசியும், இராம இராச்சிய நீதியை நிறுத்தியும் கண்ட பலன் என்ன? ஒன்பதுகோடி முசல்மான்களை உண்டாக்கிற்று. ஆறு கோடி பேர்களைத் தீண்டாதவர்கள் என்று நிலைநிறுத்திற்று. மற்றவர்களை எல்லாம் சூத்திரர்கள் என்று முடிவுசெய்து விட்டது.

இராமாயணம் நடந்திருந்தால்தானே அதற்குக் காலம் சொல்லலாம். புராணக் கணக்கின்படி எழுதின காலமும் சொல்ல முடியாது, என்றாலும் புத்தருக்குப் பின் எழுதப்பட்டது என்று சொல்லலாம். புத்தருடைய சங்கதிகள் இராமாயணத்தில் காணப்படுகின்றன. இராமர், காட்டில் பரதனைச் சந்திக்கும்போது பரத

னுக்கு இராசநீதியை உபதேசிக்கையில் புத்தர்கள் திருடர்கள், அயோக்கியர்கள், அவர்களைச் சேர்க்காதே; ஊரில் வைக்காதே; துரத்திவிடு; என்று சொன்னதாக இராமாயணத்தில் காணப்படுகிறது. ஆனதால் பௌத்தருக்குப் பின் இராமாயணம் எழுதப்பட்டது. இராமரால் வெட்டப்பட்ட சம்புகன் பௌத்தன். எப்படியெனில், சூத்திரன் தவம் செய்யக்கூடாதென்பதுமல்ல, சூத்திரர்களுக்குத் தவம் என்பது உபதேசிக்கப்படவே இல்லை. புத்தமதத்தை அனுசரித்துத்தான் சம்புகன் காட்டில் தியானம் செய்தான்.

ஒரு காலத்தில் புத்தமதம் நமது நாடெல்லாம் பரவி இருந்தது. அப்பொழுது அசோக சக்கரவர்த்தி நமது நாட்டை ஆண்டுவந்தார். அவர் புத்தமதத்தை ஏற்றுத் தன் இராச்சியமெல்லாம் அதைப் பரப்பினார். சனங்களெல்லாம் அவரை வணங்கிப் புகழ்ந்தார்கள். அவர் இராச்சியத்தில் யாரும் பொய் சொன்னதில்லை. பெண்கள் எவரும் கற்புத் தவறி நடந்ததே கிடையாது என்று பல யாத்திரீகர்கள் எழுதியிருக்கிறார்கள். அப்பொழுது இந்து சமயம் என்கிற பிராமண வைதிக சமயம் க்ஷீணித்துப் போயிற்று, அதைப் புதுப்பிக்கப் பிராமணர்கள் இராமாயணம் எழுதினார்கள். "எங்களுக்கு இராமன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் விஷ்ணு அவதாரம். துஷ்டர்களைச் சிட்சிக்கப் பிறந்தான்" என்று பலதும் எழுதினார்கள். காமலீலைகளைக் கடவுளே செய்தார் என்று புராணங்களில் எழுதிக் கோயில்களிலும் தேர்களிலும் அவைகளைச் சித்தரித்தார்கள். அந்தந்த நாட்டிலுள்ள பெரும் பண்டிதர்களைக் கொண்டு அவைகளை மொழிபெயர்த்தார்கள், பரப்பினார்கள், பாராயணம் ஆயிற்று, பக்தியாயிற்று, தெய்வமாயிற்று. கோயில் ஆராதனை, அபிஷேகச் சந்தனத்தை அர்ச்சகர்கள் சாதாரண பார்ப்பனர் மார்பில்பூசி அதே கையால் அதே சந்தனத்தைக் கலக்கிச் சற்சூத்திரர்களுக்கும் மடாதிபதிகளுக்கும் தீர்த்தப்பிரசாதம் என்று கொடுக்கும் வழக்கமும், வாங்கிக்கொள்ளும் பக்தியும் எதனால் உண்டாயிற்றோ, அதிலிருந்தே எல்லாப் பிச்சைக்காரர்களும் வாசலில் நின்று பிச்சைக் கேட்பார்கள். பிச்சைக்காரப் பார்ப்பனன்,

பார்ப்பனத்திகள் மட்டும் நம் நடுவீட்டுக்கு வந்து கேட்பார்கள். இராமாயணம் கொண்டுவந்து விட்ட எல்லாவற்றையும் எழுத முடியாது, ஏட்டிலும் அடங்காது. நீங்களே ஆலோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

விஷ்ணு இராமராக அவதாரம் செய்து இராமாயணம் நடந்ததாகவே வைத்துக்கொள்வோம். விஷ்ணுவின் சரித்திரத்தில் ஏதேனும் ஒழுங்கு இருக்கிறதா? விஷ்ணுவிற்கு இல்லாத தன்மை இராமருக்கு எப்படி வரும்? தெய்வங்கள், தேவர்கள், குரங்குகள், இராட்சதர்கள், ரிஷிகள் எல்லாம் சேர்ந்தல்லவா இராமராச்சியம்? அவர்களுடையது நமக்கு எப்படிப் பொருந்தும்? குரங்குகளோ தேவேந்திரன், சூரியன், வாயு, பிரம்மா முதலியவர்களுக்குப் பிறந்தவைகள். இராம இராச்சியத்தை அவைகள் நிர்வகிக்கலாம். நமக்கு அந்தச் சக்தி உண்டா? பல தேசத்தார்கள் படை எடுப்பால் நம் ஜனசமுகம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமா? அப்பொழுது இராமஇராச்சியமும் இராம பஜனையும் இல்லாமலா இருந்தது? அன்று முதல் இன்றுவரையும் அது செய்த காரியம் என்ன? அந்நிய மதத்திற்கு அநேகரைப் போகும்படியாகச் செய்தது. அந்நிய மதக் கூட்டத்தைப் பெருக்கிற்று. தீண்டப்படாதவர்கள் என்று நமக்கு முதுகெலும்பு போன்ற ஒரு பெரும் சமூகத்தைக் குகைக்குள் அடைத்து வைத்திருக்கிறது. வெளியே வரக்கூடாதென்று உத்தரவும் போட்டிருக்கிறது. அதிலிருந்து யாராவது தப்பித் தவறி தலையை நீட்டினால் அடி, உதை, குத்து என்கிற ஆக்கினை செய்யவும் சொல்கிறது. இராமா என்கிற மந்திரத்தையும், இராம இராச்சியத்தையும் அண்டமுகட்டுக்கு அப்பால் கூடப் புகழ்கிறார்கள். அதற்காக எழுதின ஏடுகளோ கணக்கில்லை. கட்டின கோயில்களோ பல. ஆராதனை, உண்டிகை, ஆச்சாரி, புரோகிதனுக்குப் போட்ட சோறு, தட்சணை முதலியவைகளோ சொல்லி முடியாது. பலன் என்ன? உலகப் பொது விதியை உல்லங்கனம் செய்தது. உலகப் பொதுத் தெய்வத்தை மறைத்துத் தள்ளிப் போலித் தெய்வத்தைக் காட்டிக் குரங்கையும் பட்சியையும் தெய்வமாகக் கும்பிடச் செய்தது. குரங்கையும் பட்சியையும் கும்பிடும் தேசமில்லை. அவைகளுக்கு மோட்சமென்றும், சேவையென்றும், திருநாள் கொண்டாடும் ஜனங்களில்லை.

வாசகர்களே! எட்டிலுள்ளதையும் அனுபவத்தில் இருந்ததையும் இருப்பதையுமே எழுதுகிறேன். மேல்வாரியாகப் படித்துத் தள்ளாமல் நன்றாய்ப் படித்து ஆலோசித்து அதன் உண்மையைத் தெரியுங்கள். வேதஸ்மிருதிகளால் மற்றச் சமுகங்களின் அறிவைத் தடுத்தார்கள். இராமாயணத்தால் அதை நிலை நிறுத்தினார்கள். ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் கோயில், சமயக் குருக்கள் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்படிந்திருந்த தளையை வெட்டித் தன்மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலைதூக்கினார்கள் என்னும் சரித்திரம் பல படித்திருப்பீர்கள். இராம இராச்சியத்தைப் பின்பற்றின இராசாக்கள் அவ்வழியில் செல்ல நினைத்தவர்களை எல்லாம் கொன்றார்கள். எந்த நாட்டிலாவது தெய்வம் மனிதனைக் அவதாரம் செய்து இராச்சியபாரம் செய்திருக்கிறதா? பல தேசத்தார்களுக்கு நமது நாட்டின்பேரில் படை எடுக்க வெகு ஆசை. இங்கிருக்கும் பெண், பொன் மற்றப் பொருள்களைக் கொள்ளை அடித்துக்கொண்டு போவதில் பரமதிருப்தி. அது போலவே நமக்குப் பல தெய்வலோகம். ஒவ்வொரு தெய்வலோகத்திலும், ஒவ்வொரு தெய்வம் அரசாட்சி செய்கிறது. நமது நாட்டில் அவதாரம் செய்ய அவைகளுக்கு வெகு ஆசை. பெண், பொன் மற்ற எல்லாப் பொருள்களையும் அனுபவிப்பதில் பெரும் மகிழ்ச்சி. வைரநகை, பொன்னாபரணம், தந்தப் பல்லக்கு, தங்க வாகனம், சதிர், சங்கிதம், வைப்பாட்டியுடன் பட்டணப் பிரவேசம், பள்ளியறை, பூநூல் கலியாணம், திருக்கலியாணம், சாந்தி கழிப்பு, திருஷ்டிப் போக்கு, திட்டுக் கழித்தல், பால், பாயாசம், பஞ்சாமிர்தம், அக்கார அடிசல், ஆறு காலம் அமுது படைத்தல் இத்தனையும் இதற்கு வேண்டிய சாமான்களும் ஆட்களும் தெய்வலோகத்தில் இல்லை. மலைவாசம் செய்ய ஆங்கிலேயர் நமது நாட்டை விரும்புவதுபோலத் தெய்வங்களும் அவதாரம் செய்து நமது நாட்டுக்கு வந்துவிடுகின்றன. யாத்திரையாக வரும் ஆங்கிலேயர்கள் நமது நாடு பூர்விக நாகரிகமுடையதென்றும், வந்தவர்களை உபசரிப்பதில் மேர்பட்டவர்கள் என்றும் சொல்லிவிட்டுப் போனதாகப் பத்திரிகைகளில் காணப்படுவதுபோல், அந்த அவதாரம் கடாட்சித்தது, இந்த அவதாரம் கருணை காட்டியது என்று சாஸ்திரங்கள் சொல்லக் கேட்டுப் பண்டிதர்களும் சொன்னார்கள், அவை இரண்டிலும் நமக்குப் பலன் ஒன்றே. எந்தத் தேவர்க

ளாக இருந்தாலும் மோட்சமடையப் பூலோகத்தில் பிறந்தே ஆகவேண்டுமென்று சாஸ்திரப் பண்டிதர்கள் சொல்வார்கள்.

சோழ தேசத்து வைதிகப் பார்ப்பான் யாசகத்திற்குப் புறப்படுகையில், சந்திப்பவர்கள் எங்கே போகிறீர்கள் என்று கேட்டால், 'முட்டாப் பய சீமைக்குப் போகிறேன்' என்று சொல்வார்களாம். அதுபோல அன்னிய தேசத்தார்களின் படை எடுப்பும் தெய்வலோகத்துத் தெய்வங்களின் அவதாரங்களும் நம்மைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கிவிட்டன. அந்த இரண்டு கொள்ளைக் கூட்டத்திற்கும், இராமாயணமும் இராமஇராஜ்யமுமே காரணம். எப்படியெனில், ஆதிப்படை எடுப்பு இந்தியாவுக்கு வந்தவுடனே இங்குள்ள சமய, சாதி ஏற்பாடுகளைத் தெரிந்து கொண்டார்கள். க்ஷத்திரிய ஜாதிதான் சண்டைபோடும், மற்ற ஜாதிகள் சண்டை போடத் தெரியாது, பழகவில்லை; தீண்டப் படாத கூட்டம் தொட்டால் உண்ணப்படாது; ஒன்றாக உட்காரப் படாது என்கிற பல சூத்திரக்கூட்டம்; படை வருகிறது என்று தெரிந்தாலே ஓடிப்போகிற பார்ப்பாரக் கூட்டம்; இதனாலெல்லாம் சைனியம் குறைந்து போயிற்று. நாம் நடத்தும் கொடுமையால் அநேகர் எதிரி பக்கம் போய்ச் சேர ஏதுவாயிற்று. கஜனிமகம்மது, சோமநாத படை எடுப்பதற்குப் பின் நமது நாட்டுச் சமூக சூழல்களையும், சாதிப் பிரிவினைகளையும் தெரிந்துகொண்டு பலதரம் படைஎடுத்தான். இந்துக்கள் ஒற்றுமையாக இருக்கமுடியாது, அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று பேபரும் சொன்னார். மலையாளத்தில் இராமாயண பக்தி அதிகம். இராம இராச்சியச் செங்கோல் உச்சநிலையை அடைந்திருந்தது. அதனால் ஒரு திப்பு சுல்தான் அதை ஜெயித்தான். விஜயநகர இராம இராச்சியம் சின்னாபின்னம் செய்யப்பட்டுச் சிதறிந்து மடிந்தது. தஞ்சாவூர் இராம இராச்சியம் துளசியை நம்பித் தொலைந்தது. இராமரும் அவருடைய பக்கபலமான குரங்கு, பட்சி, ஜீயர், மகந்து, பாகவதர் முதலிய சைனியங்களெல்லாம் நமது சோற்றைத் தின்று உயிரோடு தான் இருக்கின்றன. அவதாரங்களைப்பற்றி எழுதவேண்டுமானால், அநேகம் எழுதவேண்டும். தெய்வத்தின் இருப்பிடத்தில் ஆறு, குளம் இல்லையா? இருந்தால் நம் நாட்டில் அவதாரம் செய்து குளிக்கும் பெண்கள் சேலையை எடுத்து மரமேறி அம்மணமாக

வந்தால் கொடுப்பேன் என்று ஏன் சொல்லுகிறது? சிறை எடுக்கவும் அங்கே வழியில்லையோ? இருந்தால் நம் நாட்டிற்கு வந்து ஏன் சிறை எடுக்கிறது?

வாசகர்களே! முன்ஜாக்கிரதையினால் ஆழ்ந்த கருத்தைக் கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளப் பிராமணர்கள் நம்மவர்கள் மூலமாகத் தங்கள் கொள்கைகளை நமது நாட்டில் காவிய மூலமாகப்பரப்பினார்கள். இராமாயணம் எழுதினதும் இராமர் உண்டானதும் பிராமணர்களுக்கு மற்ற ஜாதியர்கள் அறிவு கெட்டு அடிமையாய் இருப்பதற்கேயாகும். அதற்காக எழுதப்பட்டிருக்கும் இரண்டு கதைகளைக் கீழே எழுதுகிறேன். அந்தக் கதைகள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அது செய்த அக்ரமமும் கொடுமையும் எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ளவே எழுதுகிறேன்.

ஒரு பிராமணப்பையன் செத்துவிட்டான். பிராமணர்கள் இராமரிடம் போய் "இராமா! உன்னுடைய இராச்சியத்தில் பெரும் அக்ரமம் நடந்துவிட்டது. சம்புகன் என்கிற சூத்திரன் தவம் செய்கிறான். அதனால் எங்கள் பையன் செத்துவிட்டான்'' என்றார்கள். உடனே இராமர் தவம் செய்யும் சம்புகனிடம் போய் அவன் தலையை வெட்டினார். உடனே பிராமணப்பையன் உயிர் பெற்று எழுந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பிராமணர்கள் ஆசிர்வாதம் செய்தார்கள் என்று இராமயணம் சொல்கிறது.

தபசு என்றால் தெய்வத்தை நினைப்பது. ஒரு ஜாதியான் தவம் செய்தால் இன்னொரு ஜாதியான் சாவதும், தவம் செய்தவனின் தலையை வெட்டினால் செத்தவன் பிழைப்பதுமான நியாயம் சாதாரணமான அறிவுக்கு கூட ஒத்துவராது. பெரும் அறிவுக்குக் கூடப் புலனாகாது. இராமாயணத்தை எந்தவிதமாக எவ்வளவு பிரபலப்படுத்துகிறார்களோ அவைகளுக்கு இந்த நீதியைப் பொருத்திப் பார்த்தால் இராமனுடைய தெய்வத் தன்மையைத் தென்னாட்டில் விளக்கினது எதற்காக என்பது தெரியும். செத்தவனைப் பிழைக்கச் செய்வது தெய்வத்தால் முடியலாம். தெய்வத்தை அடையத் தவம் செய்கிறவனின் தலையை வெட்டுவது எந்தத் தெய்வநீதி. சாதாரண நீதியில் கூடப் படாத இந்த நியாயம் விஷ்ணுவின் நேர் அவதார

மாய் உலகத்தில் நடத்திக் காட்ட வந்ததென்று சொல்லப்படும் இராம அவதாரத்தின் இராம இராச்சிய நீதியைப் பார்த்தீர்களா? புலி, காடி இராச்சியத்தில்—இந்த நீதி இருக்குமா? சூத்திரனை சம்புகன் தலையை இராமபிரா வெட்டினார் என்பதால் பார்ப்பா னுக்கு எல்லாரும் கீழ்ப்பட்டுப் பணிவிடை செய்யவேண்டுமென் றும், சூத்திரன் பார்ப்பான் மூலமாகவே தெய்வத்தையோ பர லோகத்தையோ நினைக்கவேண்டுமென்றும், இல்லையேல் தலை வெட் டப்படும் என்றும் சட்டம் இராம இராச்சியத்தில் ஏற்பட்டுவிட் டது என்பதுதான் தீர்மானம். சம்புகன் கதையை இராமயணத் தில் எழுதி, இராமரே நடந்து காட்டினார் என்று புகழ்ந்து, மற்ற இராசாக்களுக்கும் கற்பித்து, அந்த மடை இராஜாக்களால் எத்தனை தலைகள் வெட்டப்பட்டிருக்கும். தலைபோய்விடுமே என்கிற பயத் தால் பார்ப்பனர் ஏவல் தவிர வேறே நல்ல வழியில் மனதைச் செலுத்தப் பயந்து அவர்கள் சொற்படி கேட்டு நடப்பதே நமது ஆஸ்தி என்று நினைத்துக் கிடந்தது நம்நாடு.

"சம்புகன் கதைஇராமயண உத்தரகாண்டத்தில் ஒருமூலையில் இருக்கிறது. கவி இன்பமும் காவிய இரசமும் அதிலென்ன இருக்கி றது. அதை யார் படிக்கிறார்கள், இடைச் செருகலாக இருக்கலாம்; கம்பனும் வால்மீகியும் அதைப் பாடுவார்களா?" என்றெல்லாம் பெரிய ஆராய்ச்சிப் பண்டிதர்கள் வீட்டுக்குள்ளிருந்து பேசலாம். வெளியே வந்து பேசமுடியாது. சம்புகன் கதையை ஆதாரமாகக் கொண்டு அதையே நிலைபெறச் செய்ய நாலாயிரப் பிரபந்தத்தில் ஆழ்வாரும் வடகலைக்கு ஆச்சாரியான வேதாந்த தேசிகரும் எடுத்து ஆண்ட இராமஸ்துதிகளும் இருக்கின்றன.

"செறி தவச்சம்புக னன்னைச் சென்று கொன்று
செழுமறையோ னுயிர்மீட்டுத் தவத் தோனிந்த
நிறைமணிப் பூணணியுங் கொண்ட இராமா"

என்று குலசேகராழ்வார் அருளிச் செய்த பெருமாள் திரு மொழியில் காணக்கிடக்கிறது. அவர் சேரநாட்டின் அரசர். பன்னி ரண்டு ஆழ்வார்களில் ஒருவரானதால் வைணவ ஆச்சாரிகளுக்கு முன்பே இவர் காலம். இராமாயணத்தில் இராமர் இராவணனிடம்

சண்டைக்குப் போயிருக்கிறார் என்று படிக்கக் கேட்டவுடன் மந்திரிகள் தடுத்தும் தன் சைனியத்துடன் இலங்கை போகச் சமுத்திரம் வரை போய்த் திரும்பி வந்துவிட்டார். அவர் செய்த இராம கைங்கரியப் பெருமையை அவர் சரித்திர மேகூறும். இராமாயணத்தை முழு மனதுடன் நம்பி ஆண்ட இத்தகைய அரசர்கள் காலத்தில் சம்புகன் போன்றவரின் தலைகள் எத்தனை வெட்டப்பட்டிருக்கும் என்பதை ஆலோசித்துப் பாருங்கள். திருமலை நாயக்கர் காலத்திலும் வேதப்பொருள் கேட்ட சூத்திரனைக் கழுவில் போட்டார்கள். அவைகளெல்லாம் இராமஇராச்சியத்தில் முளைத்தவைகளே.

வடகலையை உண்டுபண்ணினவர் வேதாந்த தேசிகர். இவர் பாதுகாசாஸ்திரம் என்று இராமருடைய பாதக்குறட்டைப்பற்றி ஆயிரம் பாட்டுகள் ஸ்துதியாகப் பாடி இருக்கிறார். அதில் 'ஏ பாதுகையே! இராமருடைய இராச்சியத்தில்சூத்திரன் தவஞ் செய்யப் பிராமணப்பிள்ளை செத்தது என்கிற ஒரு அக்ரமம் நடந்திருக்கிறது. அதுகூட உன் இராச்சியத்தில் நடக்கவில்லை; எல்லாச் சூத்திரர்களும் எங்களுக்கு அடிமை செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் இல்லாமல் கடவுள் அடிசேரவேண்டுமென்று அவர்கள் நினைக்கவேயில்லை'' என்னும் நீதி பாதுகை இராச்சியபாரம் நடத்தின பதினான்கு வருடமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பெருமானுக்குச் சமமான ஆழ்வாருக்கும் வைணவ ஆச்சாரிக்கும் சம்புகன் கதை வெகு திருப்தி. அந்த நாளிலிருந்து ஆங்கிலேய நாள் வரையிலும் அநேக தலைகள் வெட்டுண்டுபோயின. தலை போனதேயன்றி தாழ்மை போகவில்லை.

சம்புகன் கதை வரலாறு

புத்தர் காலத்திற்குப் பின் இராமாயணம் எழுதினதென்று தெரிந்தோம். துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் என்கிற நான்கு படிகள் புத்தர்களுக்கு. துக்கத்திற்குக் காரணம் ஆசை. ஆசைக்குக் காரணம் மனது, சங்கற்ப சேர்க்கை, மனச் சங்கற்பம் குறைந்தால் மனமில்லை: மனமில்லாவிட்டால் ஆசை இல்லை. ஆசையில்லையேல் துக்கமில்லை என்பது புத்தர் கொள்கை. அதற்காகத் தியானம் செய்வார்கள் புத்தர்கள். அதற்குத் தவசு

என்று பெயர், சங்கற்பத்தைக் குறைக்க விசாரணை வேண்டுமென்று வேதாந்தி சொல்லுவதும், புத்தர் சொல்லும் தியானமும் ஒன்று தான். இரண்டுக்கும் தவசு என்றுதான் பெயர். பிராமணமதம் க்ஷீணித்துப் போனதை முன்னுக்குக் கொண்டுவர ஒரு க்ஷத்திரிய இராசாவை மகாவிஷ்ணுவின் அவதாரமான இராமன் என்று கற்பித்து அதற்குவேண்டியதெல்லாம் செய்து இராமாயணம் எழுதினார்கள். பிராமணன் தவிர மற்றஜாதிக்காரர்கள் தெய்வவழிபாடும் மோட்ச சொர்க்கம் புகும் ஏற்பாடும் வேண்டுமானால் பிராமணன் மூலமாகவே செய்துகொள்ளவேண்டுமென்பது பிராமணமத சித்தாந்தம். இல்லையேல் தண்டனை. இதுதான் ஸ்மிருதிகளில் இருக்கின்றன. புத்த மதம் பரவின உடன் அவ்வேற்பாடு சீர்குலைந்துவிட்டது. அநேகர் புத்த ஏற்பாட்டின்படி தியானம் என்ற தவசுக்குப் போய்விட்டார்கள். அதைத் தடுப்பதற்குப் பிராமணர்கள் சேர்ந்து ஆலோசித்து ஒரு பிராமணப் பையனைப் படுக்கவைத்துச் செத்துப் போனதாகப் பொய் ஏற்பாடு செய்து இராமனிடம் போய் "சூத்திரன் தவசு செய்கிறான், அதனால் எங்கள் பையன் செத்துவிட்டான்" என்றார்கள். இராமர் சூத்திரனை சம்புகன் தலையை வெட்டினார். பிராமணப் பையன் பிழைத்துக்கொண்டான் என்றார்கள். இதுமாதிரிப் புரட்டுக்கள் பல நடந்திருக்கின்றன.

பெத்தான் சாம்பனுக்கு முத்தி கொடுப்பது முறை என்று சிவபெருமான் உமாபதி தீட்சதருக்குச் சீட்டு எழுதிக்கொடுத்ததாகச் சொல்லிப் பெத்தான் சாம்பானை நெருப்பிலிட்டுக் கொன்றதும், நந்தனை நெருப்பில் பொசுக்கிப் பின் பிராமணனாக வந்தான் என்றதும் புரட்டேயாகும். அவைகளை இனியும் நம்பும் படித்த சைவர்கள் இல்லையா? பிராமணனின் புரட்டை நம்பும் படிப்புத்தான் அவர்கள் படிப்பு. அவர்களைத்தான் படித்தவர்கள் என்று சொல்வது வழக்கம். புரட்டை நம்பும் படிப்பும், நம்பாவிட்டால் இராச தண்டனையும், சந்தேகப்பட்டுக் கேட்டால் பிராமணக் கொடுமையும் நிறைந்து, அதுவே தெய்வ சக்தியாகவும் இருந்தது. அந்தக் காலத்துத் தொடர்பால் இந்தக் காலத்தில் நடந்த தொன்றைச் சொல்லுகிறேன். அதிலிருந்து எல்லாம் தெரிந்து கொள்ளுங்கள்.

சிறு கிராமங்கள் சிலவற்றில் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தார் ஒரு பிரபு. அவர் ஊருக்குப் பக்கம் ஒரு கோயில். அந்தக் கோயில் அவருக்குச் சொந்தம். அங்கே ஐந்தாறு பார்ப்பனர்கள் வீடு. அவற்றுள் ஒரு பத்து வயதுப் பார்ப்பனப் பெண் இறந்துவிட்டது. அங்கிருந்த பிராமணர்கள் இரண்டுநாள் பொறுத்துப் பிரபுவிடம் வந்து பக்கத்தூரிலிருக்கும் வைத்தியன் மாந்திரீகம் செய்து எங்கள் குழந்தையைக் கொன்றுவிட்டான் என்றார்கள். அவன் யார், எந்த ஊர், என்ன பேர் என்று கேட்டார்களேயல்லாமல், மாந்திரீகம் செய்வது எப்படி? செய்தால் குழந்தை எப்படிச் சாகும்? என்கிற ஆலோசனையே உண்டாகவில்லை, அதைப் பற்றிப் பேசவுமில்லை. முன்பட்ட அடி, உதைகள் ஆலோசனை செய்வதை அழித்துவிட்டன. மீறிக் கேட்கலாமென்றாலோ பார்ப்பனர் முகம் முன்னால், பிரபுவின் முகம் பின்னால். எந்த விவகாரத்தின் தீர்ப்புக்கும், முடிவுக்கும் அடி எடுத்துக் கொடுப்பதும், கூட்டுவதும், பிரிப்பதும், ஓட்டுவதும், அழுத்துவதும், உண்டாக்குவதுமான வேலையில் பார்ப்பனர்கள்தான் முதன்மையானவர்கள். பார்ப்பாருக்கும் அவ்வைத்தியனுக்கும் விரோதம். ஆகவே பல்லைப் பிடுங்கிவிட்டால் மந்திரம் பலிக்காதென்ற முடிவுக்கு வந்து பிரபுவை, வைத்தியன் பல்லைப் பிடுங்க உத்தரவிடச் செய்தார்கள். அப்படியே வைத்தியனைக் கொண்டுவந்து கட்டிப்போட்டுப் பல்லைப் பிடுங்கிவிட்டார்கள். வலி பொறுக்கமாட்டாமல் வைத்தியன் செத்தான். போலிஸ் அஸிஸ்டண்ட் சூப்பிரண்ட், சப்கலெக்டர் இவர்களுடைய அதிகார எல்லைக்குள் இருப்பது அந்தக் கிராமம். இந்து அதிகாரிகளாக இருந்தால் ஆகம தந்திர சாஸ்திரத்தில் மாரணம் சொல்லப்பட்டிருக்கிறதென்று செத்தவன் பேரில் கவலையில்லாமல் இருந்திருப்பார்கள். அந்த இரண்டு அதிகாரிகளும் ஆங்கிலேயர்கள். அதனால் கேஸ் வந்தது. சிறிதுகாலம் பிரபு வாரண்டுக்கு ஒளிந்து கொண்டிருந்தார். பின் பணச் செலவு, சாட்சி மாற்றம் முதலியவற்றால் தப்பினார். இப்படி அநேகம் நடந்திருக்கிறது. தெரிந்தது கொஞ்சம், தெரியாதது அநேகம். பல தெய்வங்களும், அவைகளுக்காக உண்டாக்கப்பட்ட அநேக சாஸ்திரங்களும், பார்ப்பனர்களுக்கே கையாயுதங்களாக இருக்கின்றன. பார்ப்பனர்கள் சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார்கள். அவர்கள் பழியை ஏற்றுக்கொள்ளத் தெய்வங்களிருக்கின்

றன. நியாயம் சொல்லச் சாஸ்திரங்களிருக்கின்றன. துன்பங்களை ஏற்றுக்கொள்ள நாம் இருக்கிறோம். கவி இன்பமும், காவிய இரசமும் கண்டு களிக்கப் பண்டிதர்களிருக்கிறார்கள்.

(3)

இராம இராஜ்யம் இருந்தது, விசேடமுடையது என்று வைத்துக்கொண்டே பேசுவோம். மனிதனாகப் பிறந்தவன் காலத்தைப் பற்றி மாத்திரம் வசிக்கவில்லை, தேசமாகிய இடத்திலும் வசிக்கிறான். காலத்தைப் பற்றிப் பார்த்தால் அறுபதினாயிரம் பெண்சாதிகளுடன் வாழ்ந்த இராசாக்கள், தெய்வமே மனிதனாக அவதாரம் பண்ணி உலகை ஆண்ட மன்னர்கள், மூன்றுகோடி வயதுடைய இராட்சதன், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் தலைகளையுடைய அரக்கர்கள், ஆயிரம் வருஷத்திற்கு ஒருதரம் ஒரு தலையும் இரண்டு கையுமாகக் கிள்ளிப், பத்துத் தலைகளையும் இருபது கரங்களையும் கிள்ளிக் கைலையங்கிரிக்கு அர்ச்சனை செய்த சிவபக்த இராட்சதன், விந்தியகிரியிலிருந்து மகேந்திரகிரிக்குப் பாய்ந்து அங்கிருந்து கிஷ்கிந்தகிரிக்குக் குதித்து உலகமெலாம் ஒருவிநாடியில் சுற்றித் தெய்வபூசை செய்த வானரமன்னன், சூரியன், வாயு, பிரம்மா மற்றத் தேவர்களுக்குப் பிறந்த குரங்குகள், சாகாவரமும், சிரஞ்சீவி வரமும் பெற்ற கரடி, குரங்கு, அண்டமுகட்டுக்கு அப்பாலும் வாலை வளரவிடும் குரங்கு, ஆயுதமேயில்லாமல் எந்த மலைகளையும் பெயர்த்து எறியும் குரங்கு, இவர்கள் எல்லோருடையவும் அரசாட்சியாக இருந்தது அந்தக் காலம். அதுவுமல்லாமல் தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும் தெய்வலோகத்திற்கும் பூலோகத்திற்கும் பாதைபோட்டு நடந்துகொண்டே இருந்தார்கள். இந்தக் காலத்துத் தேசத்தையும் சனங்களையும் பார்த்தால் பௌதிக சாஸ்திரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் ஐரோப்பியர், அமெரிக்கர்களுடன் சேர்ந்து வசிக்கும் காலம். தெய்வங்களையும் தேவர்களையும் தெய்வலோகத்தில் பார்த்தது போதும், கொல்லன் உலையில் தெய்வங்களையும், விஞ்ஞானிகளிடம் தேவர்களையும் பாருங்கள் என்று சொல்லுகிற காலம். அந்தக் காலத்து இராச்சியபாரம் இந்தக் காலத்துக்கு எப்படி ஒத்துவரும்? தேவலோகத்துத் தெய்வத்தைப் பார்த்துப்

பார்த்துப் பொங்கலும் புளியோதரையும்தான் விருத்தியாயின, விபூதியும் நாமமும் இராச்சியபாரம் செய்தன, உருத்திராட்சமும் துளசிமணியும் மக்களை நடத்தின. பலன் என்ன? கஞ்சிக்கு அலையலாயிற்று, இடுப்பிற்குத் துணியில்லை. இராமமந்திர ஜெபம் வயிறு நிறைந்தவர்கள் வாய்க்கு அசைபோட உதவிற்றேயல்லாமல் வயிறு ஒட்டிக் கிடக்கும் மக்களுக்கு ஒன்றும் உதவவில்லையே. ஆஸ்திகம் என்கிற இராம இராச்சியம் தருமம் என்கிற மேலான நெறியை எப்படி நடத்திற்று என்பதைப் பாருங்கள். நமது ஜன சமூகத்தில் வீரம், போர், அன்பு என்பனவற்றை மிதித்துக் கசக்கி வறியோராக்கி, இழிவடையச் செய்து, பட்டினியால் வாடி உலரும் சனங்களைப் பற்றிக் கவலையில்லாமல், பாட்டாளிகளை நினையாமல், நம்மை ஒன்றுசேரவிடாமல் உதவாக்கரையான மதத்தின் சிறந்த பிரதிநிதிகள் என்று தின்று கொழுத்திருக்கும் சோம்பேறிகளையும், ஒழுக்கம் கெட்டுக் கடவுள் அன்னசாலையிலே வசிப்பவர்களையும் இராம இராச்சியம் என்கிற கற்பனை வழக்கச் சொல்லைத் தொழிலாக உடையவர்களையும் போஷிப்பதே நமது ஆஸ்திகமாய்விட்டது. அதற்காகவே பல தெய்வங்களை உண்டாக்கிக்கொண்டார்கள். மற்றத் தேசங்களில் எத்தனையோ வீரர்கள், அறிஞர்கள், சனங்களுக்கு நன்மை செய்தவர்கள், அநேக கருவிகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், இருந்தார்கள், இருக்கிறார்கள். அந்த நாடுகள் அவர்களை அவதாரமென்றோ மகாத்மாவென்றோ சொல்லுவதில்லை. ஏனெனில் அந்த நாடுகளில் தெய்வங்கள் அவதாரம் பண்ணியதில்லை. கற்பனையால் கதைகள் எழுதி அவைகளைக் காவியம் என்று தெய்வப் பெயர் வைத்து மனிதனை மனிதன் உயர்வு தாழ்வு உண்டாக்கி, அடிமைகொண்டு ஏமாற்றி வயிறு வளர்க்கும் சாதியும் அங்கில்லை. அவைகளைக் கேட்டு ஏமாறுபவர்களும் இல்லை. பொய்யை மெய்யென்று தத்துவார்த்தம் சொல்லும் சாஸ்திரிகளும் இல்லை. அவைகளைக் கேட்டுப் பகுத்தறிவைப் பயன்படுத்தாப் பண்டிதர்களும் அங்கில்லை. இந்த இராம இராஜ்யத்தைப் பார்த்துத்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பற்பல நாடுகளிலும் "பார்ப்பார் இலையால்" என்றார் ஒரு திராவிட நாட்டுப் பெரியார். "நால் எனிலோ கோல் சாயும்" என்றாள் திராவிடக் கிழவி.

இப்பொழுது அவைகளில் பல குறைந்துவிட்டாலும் அந்த நிழலிலேயே வாழ நினைக்கிறார்கள். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதுபோலச் சிறிது இருக்கலாம். குலசேகர ஆழ்வார் (அரசர்) வைணவ ஆச்சாரிகளுக்கு முந்தினவர். ஆழ்வார்களைச் சேர்ந்தவர். வேதாந்ததேசிகர் வடகலையை உண்டுபண்ணினவர். படிப்பிலும் தர்க்கத்திலும் அபார சக்தி வாய்ந்தவர். இராம ராஜ்யத்தைப் புகழ்ந்ததுடன் பாதக்குறட்டின் இராஜ்யத்தையும் புகழ்ந்தார். எந்த மனிதனும் தன் தனி மனதுடன் ஆலோசனை செய்தால் உண்மையை உணருகிறான், கூட்டத்தில் கலக்கையில் கூட்டத்தை விரும்புகிறான். யோசனை செய்வதில்லை. அப்பொழுது அவர்கள் தரும புலன்கள் மங்கிவிடுகின்றன. தன்னிடம் உலகத்தையும், உலகத்திடம் தன்னையும் காண்பவனே உண்மை காண்பான் என்கிற உயர்ந்த வார்த்தையை மேலான சந்நியாசிகள் சொல்லுவார்கள், அதுகேட்டுச் சம்சாரிகள் தங்களிடமுள்ள சிறந்த வஸ்துக்களைச் சந்நியாசிகளுக்குக் கொடுப்பார்கள். ஆனால் பொதுத் தெய்வத்தின் பொது விதிக்கு அடங்கி நடப்போரைச் சாதிக் கட்டாலும் சமயக்கொடுமையாலும் துன்புறுத்துகையில், அவைகளுக்குச் சந்நியாசிகள் முகமலர்ச்சியுடன் ஆசிர்வாதம் செய்வார்கள். இப்படியே உண்மைக்குப் பரிந்து பேசுபவர்கள் இல்லாமற் போயிற்று. இப்படியே நமது வாழ்க்கை, நமது படிப்பு, பழக்கங்கள், தெய்வக் கதைகள், உபதேசங்கள், ஏற்பாடுகள் இவைகளால் நமது வாழ்க்கை இன்பங்கள் வற்றிப் போயின. எனவேதான் சிறுகூட்டமான பல சாதியார்களுக்கும் நாகரிகமென்று சொல்லிக்கொள்ளும் பெருங்கூட்டமான நாம் அடிமைப்பட்டோம்.

(4)

ஆதிமனிதர்கள், ஆகாரம், இடம், பெண் முதலியவைகளைப் பங்கு கொள்வதில் சண்டை உண்டாயிற்று. அதைப் பகிர்ந்து கொடுக்க அவர்களிலிருந்தே ஒரு பலசாலியும் ஏற்பட்டான். அதிலிருந்தே அவசியமும் அதிகாரமும் பெருகி அரசாட்சியும் ஏற்பட்டது. மண்ணை ஆண்டவர்கள் கோடி, மலையை ஆண்டவர்கள் கோடி, இனியும் ஆளப்போகிறவர்கள் எத்தனை கோடியோ என்றபடி இராம இராஜ்யம் இருந்ததாகவே வைத்துக்கொள்வோம்.

எந்த மனிதனும் ஆசை, கோப தாபத்துடன்தான் அரசாட்சி செய்வான். அப்பொழுது அதைக் கூட்டியும் குறைத்தும் சனங்கள் சொல்லுவார்கள். இராம ராஜ்யம் கூட்டிச் சொல்வதற்கு ஏற்றதாக இருந்தாலும் நிலைத்த உண்மைகளும் பலன்களும் இருக்கவேண்டுமே. புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தது, எலியும் பூனையும் ஒரு பொந்தில் வாழ்ந்தது, தேளும் பாம்பும், சென்னும் மனிதனும் ஒரே பாயில் படுத்திருந்தன இராம இராஜ்யத்தில் என்பது உண்மையாகவிருந்தாலும், பலன் என்ன? யாருக்கும் பகையில்லை என்னும் கருத்தைக் காட்டுவதானாலும் அது இயற்கைக்கு, உலக உற்பத்திற்கு, உலக அமைப்புக்கு நேர்விரோதம். புலியும் பூனையும் புல்லைத் தின்று ஜீவிக்குமோ? அப்படியானால் அதன் வம்சமே அழிந்தல்லவா போகும். மகாவிஷ்ணு உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தார் என்பது நமது கொள்கை. அந்த மகாவிஷ்ணுவே உலகத்தில் மனிதனாகப் பிறந்து தன் சிருஷ்டிக்கு நேர்விரோதமாகச் செய்வார் என்பது பொருந்தவில்லையே. இயற்கைக்கு விரோதமாக ஏடெழுதி அதை உபதேசித்து வயிறு வளர்த்த குற்றம்தான் எல்லோருக்கும் கால், அரை வயிறு உண்டு சாகவும், பிச்சை வாங்கவும் ஏற்பட்டதென்பதை யாவரும் உணரவேண்டும், இராமதீர்த்தர் சொன்ன சில வார்த்தைகளைக் கீழே தருகிறேன்.

"இமயமலையில் செழித்தோங்கி வளர்கின்ற மரங்களுக்கு எனது உஷ்ணத்தையும் தெளிவையும் கொடுத்துவிட்டேன்; அதைக் கொண்டே நீங்களும் திருப்தியடைந்து வளரவேண்டும்; உங்களுக்கு மறுபடியும் அவ்வித மேன்மையையும் சக்தியையும் கொடுக்கமாட்டேன் என்று பம்பாயிலுள்ள மாமரங்களிடம் சூரிய பகவான் சொன்னால் இந்த மரங்கள் செழித்தோங்கி விருத்தியாகா. தோட்டத்திலுள்ள ஆப்பிள் பழங்களின்மேல் வீசும் சூரிய உஷ்ணத்தைக் கொண்டு தடாகத்தில் வளரும் அல்லி மலர்கள் புஷ்பித்துவிடுமோ? இதேமாதிரி புத்தபகவான், ஏசுகிறிஸ்து, முகம்மது நபிநாயகம், முதலியவர்களிடம் தோன்றிய ஞானத்தைக் கொண்டு ஷேக்ஸ்பியர், நியூட்டன், ஸ்பென்சர் முதலியவர்கள் வசிக்க முடியாது. ஆதலால் நாமும் நமது தற்கால விஷயங்களையெல்லாம் நமது முயற்சியைக் கொண்டே தீர்மானித்துவிட வேண்

டும். முற்காலத்தில் விளங்கிய நமது மதிப்பிற்குரிய முனிவர்கள், ரிஷிகள், அவதாரங்கள் முதலியவர்களுடைய திருஷ்டியினால் பார்த்தால் நமக்கு ஒளியைத் தராது. நாமே அறிவு பெற்றுப் பார்க்கவேண்டும்'' என்றார்.

எந்தத் தேசத்தில் சனங்கள் காம இச்சையை இஷ்டம்போல் விடாமல் ஒரு கட்டுக்கு அடங்கி நடக்கிறார்களோ, அந்த இராஜ்யம் விசேடமுடையதாக இருக்கும். இல்லையேல் பல இன்னல்களுக்குள்ளானதாகும். இராமாயணத்தைப் பார்த்தால், காமம் ஒழுங்கு முறை தவறிய நடந்திருக்கிறது. மானைத் துரத்திச் சென்ற இராமரை, தேடிப் பார்த்துவா என்று சீதை இலட்சுமணனிடம் சொன்னாள். மறுத்தான் இலட்சுமணன்; போனவன் மனைவி இருப்பவனுக்கென்று நினைத்தையோ என்றாள் சீதை. வண்ணான் பெண்சாதி கோபித்துப்போய் அன்னியன் வீட்டில் ஒருநாள் தங்கி மறுநாள் வீடு வர வண்ணான் சந்தேகப்பட்டு ஒரு நாளாயிருந்தாலும் என் சந்தேகம் ஒழியாது, இராமனுடைய நீதியும் ஒழுங்குமல்ல என்னுடையது, உன்னைச் சேர்க்கமாட்டேன், என்றான். இவைகளை ஆலோசித்துப் பார்த்தால் ஆண் பெண் அவநம்பிக்கையும் விளங்குகிறது. கம்பன் கவியின்பம் ஆண் பெண் பாதாதி கேசம்வரை போவதையும் கவனியுங்கள்.

இராமாயணத்திலுள்ள ஒரு முக்கிய பாகத்தைச் சொல்லுகிறேன். கதையோடு கதையாய் இதைத் தள்ளிவிடாதீர்கள், இதைக் கவனித்தீர்களானால் இராமாயணம் எழுதப்பட்ட காரணமும் இராமராச்சியச் சிறப்பும் தெரிந்துவிடும். இராமர் காட்டிற்குப் போவதாகச் சீதையிடம் சொன்னார். நானும் வருகிறேன் என்று சொல்ல, நீ வந்தால் காட்டில் துன்பங்களை அநுபவிக்க நேரிடும் என்றார். ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்ற முடியாதவனென்று என் தகப்பனாருக்குத் தெரிந்திருந்தால் உனக்குக் கலியாணம் செய்துகொடுத்திருக்கமாட்டார் என்றாள். சீதை சொன்னபடி சாதாரணமாகச் சில பெண்கள் சொல்லுவதுண்டு. சீதை அவ்விதம் சொன்னது குற்றமே. காட்டிற்கு உன்னைக் கூட்டிக்கொண்டு போகிறேன்; நீ வருவதாயிருந்தால் நான் சொல்கிறபடியே செய்துவிட்டு வரவேண்டும். அதாவது உன் நகைகளையும் உன்னிட

முள்ள மற்றப் பொருள்களையும் பிராமணர்களுக்குக் கொடுத்து விடவேண்டும். உன்னுடைய வேலையாட்களுக்கு நீ ஏதாவது கொடுக்க நினைத்தால் அதையும் பிராமணர்களைக்கேட்டுக் கொடுக்க வேண்டும், என்று இராமர் சொன்னார்.

இதனல்பிராமணர்களுக்குத்தான் எல்லாம்கொடுக்கவேண்டும் என்பதற்காகவே இராமாயணக் கதை எழுதினதென்பது தெரிய வில்லையா? ஊரிலிருந்தாலும் காட்டுக்குப் போனாலும் எல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துவிடு என்று சொல்லவே எல்லோ ருக்கும் பொதுவாயுள்ள தெய்வம் பூலோகத்தில் அவதாரம் பண்ணி சனங்களுக்கு நடந்து காட்டி, இராமராச்சியம் நடத்தி வந்தது என்று விளங்கவில்லையா? அந்தத் தெய்வம் நமது தேசத் தில் மட்டும் அவதாரம் பண்ணிப் பிராமணர்களை இரட்சித்ததும், நம்மை எல்லாம் மோட்சத்திற்கு அனுப்ப ஏற்பட்ட பொறுப்பும் கருணையும் எவ்வளவு ஆச்சரியமுடையதாக இருக்கிறது! "பற்பல நாட்டிலும் பார்ப்பார் இலையால்" என்று கபிலர் சொன்னபடி எந்த நாட்டுக் கடவுளும், எந்த நாட்டிலும் பிராமணர்களைச் சிருஷ்டிக்கவில்லை. நமது கடவுள் நம்நாட்டுக்குப் பிராமணர்களைச் சிருஷ்டித்துப் பூலோகத்தில் அவர்கள் சுகமாகச் சீவிக்க உங்களிட முள்ளதெல்லாம் அவர்களுக்குக்கொடுத்துவிடுங்கள்; அப்பொழுது தான் உங்களுக்கும் செத்துப்போன உங்கள் முன்னோர்களுக்கும் மோட்சம் கொடுப்பேன் என்று சொல்லும் நம் கடவுளின் பெருந் தன்மைதான் என்னே! அவருடைய அன்பிற்கும் கருணைக்கும் நாம் நன்றி செலுத்தாமலிருப்பதுதான் எப்படி? உலகத்தில் பல சமயங்களிருக்கின்றன. அந்தந்தச் சமயத் தெய்வங்கள் அதனதன் லோகத்தில் இருக்கின்றன. நமது தெய்வமோ தன் லோகத்தில் செள்க்கியமாக இருக்காமல் மனைவியுடன் பூலோகத்திற்கு வந்து பட்டபாடு பட்டுப் பிராமணர்களை நான் என் முகத்திலிருந்தும், உங்களை எல்லாம் என் காலிலிருந்தும் உண்டாக்கினேன். ஆனதால் பிராமணர்களுடைய உதவியில்லாமலும் அவர்களை என்முன் நிறுத்தாமலும் பிராமணனல்லாதவன் வணங்கினால், கும்பிட்டால் அவன் தலையை வெட்டுவேன் என்று வெட்டவும் செய்தார். அந்தத் தெய்வத்தின் நீதியையும் நேர்மையையும் நீங்களே பாருங்கள்.

தெய்வம் ஒன்றே என்றும் அது எல்லோருக்கும் பொது என்றும் எல்லாச் சமயங்களும் சொல்லுகின்றன. நமது சமயமும் அப்படித்தான் சொல்லுகிறது. அப்படியிருக்க அடிக்கடி தெய்வ லோகத்திலிருந்து பூலோகத்திற்கு வருவதும்; அவதாரம் எடுப்பதும், எழுந்தருளுவதும் என்ன? எங்கேயிருந்து இந்தத் தெய்வங்கள் வருகின்றன? அகண்டாகாரமாய் மனதிற்கு எட்டாத நிர்க்குண தெய்வத்தை எல்லோரும் வணங்கமுடியாது. ஆனதால் அந்தத் தெய்வத்தைச் சகுணமாக வைத்து வணங்கச் செய்யும் ஏற்பாடு என்றால், அதோடு, அது வந்த வேலையைப் பார்த்து விட்டுப் போகாமல் கலியாணத்திலிருந்து கல்லெடுப்புவரை பார்ப்பானுக்குக் கொடுத்தால்தான் மோட்சமுண்டு, புண்ணியமுண்டு, நானும் அப்படியே நடத்தினேன் என்று ஏன் காட்டவேண்டும்? இவைகள் அந்தரங்க ஏமாற்றமென்று விளங்கவில்லையா? "நீ காட்டிற்கு என்கூட வருவதாயிருந்தால் உன்னுடைய பொருள்களை எல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். நீ உன் வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுக்க இஷ்டப்பட்டாலும், கொடுப்பதாயிருந்தாலும் பிராமணர்களைக் கேட்டு அவர்கள் சொற்படி செய்" என்றுதானே இராமர் தன் பெண்சாதியான சீதைக்குச் சொன்னார். இவ்விதஉத்தரவினால் ஒரு கூட்டத்திற்கு லாபமும் ஏழைகள் வாயில் மண்ணுமல்லவா விழுந்துவிட்டது. இதுதான் சகுண உபாசனையா? அதை உபதேசிக்கவா அண்ட பகிரண்டமெல்லாம் வியாபித்திருக்கும் தெய்வம் பூலோகத்துக்குச் சகுணமாக வந்தது? ஸ்மிருதிகளில் பார்ப்பனர்களுக்குத் தான தருமம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதுவும் உத்தமப் பிராமணர்களுக்கே கொடுக்கவேண்டுமென்றும், இல்லையேல் கொடுத்தவனுடைய உயர்நிலை கெட்டுவிடும் என்றும் சொல்லுகிறது. ஆனால் வேலைக்காரர்களுக்குப் பிராமணர்களைக் கேட்டு வெகுமதி கொடு என்று ஸ்மிருதியில் சொல்லவில்லை. பொருளாகக் கண்ட பொருள்களுக்கெல்லாம் முதற் பொருளாகி எங்கும் பிரகாசமாய் விளங்கும் அந்த நிர்க்குண தெய்வம் தன்னிடமிருந்து இராமர் என்கிற சகுணத் தெய்வத்தைப் பூலோகத்திற்கனுப்பி ஸ்மிருதியிலுள்ள குறைபாட்டையும் தீர்த்துவைத்திருக்கிறது என்றால், எல்லாருக்கும் பொதுவில் நடனமிடும் அந்தப்பொதுத்

தெய்வத்தின் கருணையும் அருளும் தனியாக நமக்கும் நம் தேசத்துக்கும் சென்றிருப்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

(5)

இராமாயணம் எழுதின கூட்டத்திற்கோ காரியம் கைகூடிற்று. வயிறும் நிறைந்தது. அதை நமது நாடெல்லாம் பரப்பின நமது பண்டிதர்கள் கவியின்பம் கண்டு களித்துக்கொண்டேயிருக்கிறார்கள். இராமாயணம் கேட்ட பணக்காரர்களோ இராமர் கதை கேட்டாய்விட்டது, இனி நமக்கு ஒரு குறையுமில்லை, ஏழைகள் வயிற்றில் எப்படியும் கைவைக்கலாம் என்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் எப்படியிருந்தாலும், இராமாயணம், இனும் வாங்கும் வேலைக்காரர்களின் இன்பத்தைத் துன்பமாக்கி விட்டதே. அதைச் சரியாகத் தெரிவிக்க வேண்டுமானால் ஆதியிலிருந்து பல சங்கதிகள் சொல்லவேண்டும், இடமில்லை. அதில் பல, தேய்ந்து போனவை; சிலதை மட்டும் சொல்லுகிறேன். அதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள். சூத்திரனுக்குத் தண்ணீர் கொடுத்தால் மற்றத் தண்ணீரும் சேஷப்பட்டுவிடும். பறையனுக்குச் சோறு போட்டால் பாவம் என்பது எங்கேயிருந்து வந்தது! அதே இடத்திலிருந்து தான் வேலைக்காரன் இனுமும் உண்டாயிற்று. அரச பெண்களும், பணக்காரர் மனைவிமாரும் எதையும் பிராமணர்களைக் கேட்டுச் செய்யவேண்டுமென்பதற்காகவே இராமர் சிதைக்குச் சொன்னார் என்று இராமாயணத்தில் எழுதினார்கள். அந்தத் தெய்வவாக்கு என்கிற எழுத்து எல்லாவற்றிலும் புகுந்துகொண்டது. பார்ப்பனர்களைக் கேட்டுச் சொல்லு என்கிற வார்த்தை குத்தலாக அடிக்கடி நம்மவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். ஏன்? எல்லாம் பார்ப்பனர்களைக் கேட்டுச் செய்துவந்த பழக்கமே.

வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டுமானால் பிராமணர்களைக் கேட்டுக் கொடுக்க வேண்டுமென்று சிதைக்கு இராமர் சொல்லியிருக்கிறார். மகாபதிவிரதையான சிதையும் அப்படியே நடந்தாள் என்பது அரச பெண்களுக்குப் பிராமணர்கள் சொல்லியுமிருப்பார்கள். எந்த இடத்திற்கும் பிராமணர்கள் போகலாம் தடுத்தால் சாபம் கொடுப்பார்கள். விஷ்ணுவும் இலட்சுமியும் படுத்திருந்த பள்ளியறைக்குப் போனதைத் தடுத்த

தற்கே சாபம் கொடுத்தார்கள் என்று இராமாயண உற்பத்திக்கதை சொல்லுகிறது. அதனால் பிறவிட்டுப் பெண்களிடம் புரோகிதர்கள் தாராளமாகப் பேசுவார்கள் என்று ஏற்படுகிறது. ஒரு அரசபெண் பழைய சேலை ஒன்றைத் தன் வேலைக்காரருக்குக் கொடுப்பதானால் புரோகிதனைக் கேட்கவேண்டும் என்ற ஏற்பாடு இராமாயணத்தால் உண்டாக்கப்பட்டுவிட்டது. புரோகிதனைக் கேட்பார்கள். அரச பெண்களின் சேலைகளில் பழையதும், புதியதும், ஏகதேசம் ஒன்றாகவே இருக்கும். கொடுக்கச் சொல்லப் புரோகிதனுக்கு மனம் இல்லாவிட்டாலும் தான் வாங்கிக்கொள்வது சரியல்ல. பழையதைப் பெறுவது தோஷம். அதிலும் அரசபெண் கட்டியதையும், அவள் கட்டிக்கொள்வதையும் சுத்திகரிக்க வேண்டும். அந்தச் சுத்தி, மந்திரத்தால் வரவேண்டும் என்பான். மந்திரத்தால் சுத்திபண்ணி விடுங்கள் என்பார்கள். அதற்கு வேண்டியதைச் செய்யக் காரியஸ்தனுக்கு உத்தரவு போடுவார்கள். சுத்திக்கு என்ன வேண்டுமென்று காரியஸ்தன் கேட்பான். அதற்குப் பிள்ளையார் பிரதிஷ்டை வேண்டும், மந்திர தேவதையை ஆவாகனம் பண்ண வேண்டும், எதற்கும் ஆச்சாரப் பீடம் வேணுமோ இல்லையோ என்பான். இராச காரியமானதால் அஷ்டலட்சுமிகளுக்கும் அவிர்ப்பாகம் கொடுக்கவேண்டும் என்பான். பிரதிஷ்டையாயிற்று. ஒவ்வொன்றிற்கும் இலையாயிற்று. தட்சணையும் வந்தது. ஆச்சாரி அம்மணமாக இருப்பார். ஒரு சோமன் ஜோடி வேண்டுமே, அதுவும் வந்துவிடும். இராசாக்களுக்குத் தைரிய இலட்சுமி பிரதானம். இராசாத்திக்குப் பாக்கிய இலட்சுமி பிரதானம். பாக்கிய இலட்சுமிக்கு ஒரு சேலை வைக்க வேண்டுவது சாஸ்திரயுக்தம், என்று ஒரு சுலோகமும் சொல்லுவார். இராசாத்திக்கோ காரியஸ்தர்களுக்கோ சுலோகத்தின் அர்த்தமும் புரியாது, புடவையும் வந்துவிடும். இதற்குள் சுற்றியிருக்கும் பார்ப்பனரும் வந்து சூழ்ந்து கொண்டு புரோகிதனைப் புகழ்வார்கள். கிரிகைகளை அலங்கரிப்பார்கள். பக்தியைக் காட்டிப் பதுங்குவார்கள், ஒதுங்குவார்கள். அங்கிருப்பவர்களிடமெல்லாம் அவரவர்களுக்குத் தக்கபடி பேசுவார்கள். சமய சந்தர்ப்பம் ஏற்பட்டால் இராசாவைக்கூட வரும்படியாகச் செய்துவிடுவார்கள். பின் சாப்பாட்டுக்கும் தட்சணைக்கும் குறைவென்ன? இதை இராசாவின் இன்னொரு பெண்சாதி பார்த்தால் இதைவிடப் பெரிதாகச் செய்யச் சொல்லுவாள். இதில்

அவர்களுக்கென்ன கஷ்டம்? இராசாத்திக்கு ஒரு வார்த்தை, புரோகிதனுக்கு மந்திரம் என்கிற மொளை மொளைப்பு. இதற்காகத் தான் இராமாயணத்தில் சீதைக்கு இராமர் சொன்னது. இதை எல்லாம் பார்த்த ஒரு பண்டிதன் விஜயநகரத்தைப் பார்த்துப், "பார்ப்பான் பெருத்து வடுகன் துரைத்தனம் பாழ்த்ததுவே" என்று சொன்னான்.

ஒரு வேலைக்காரிக்குப் பழைய சேலையைக் கொடுக்க இத்தனை ஆடம்பரமா? அரண்மனைக்குப் புத்தியே இல்லையா? என்று நினைப்பீர்கள். இப்பொழுது பாத்திரம் எத்தனை புத்திசாலிகள் இருக்கிறார்கள்?

(6)

முன்னோர் கொடுத்த அந்த இராமாயணப் பொக்கிஷம், நாமத்தையும், பொங்கல் புளியோதரையையும் கொடுத்ததேயல்லாமல் ஆண்மையைக் கொடுக்கவில்லையென்று சொன்னேன். இராமாயணத்திலுள்ள வீரமும், ஆண்மையும், கற்பனை உலகத்தையும், கடவுளையும் சேர்ந்ததென்றும், அது, நமது உலகுக்கும், நமக்கும் உபயோகப்படக்கூடியதல்ல என்பதை எழுதுகிறேன். ஒரு குறிப்பிட்டவருக்காக நான் இதை எழுதவில்லை. அவர் பேச்சையும் இதிலுள்ளதையும் ஒத்துப் பார்க்கவே இதை எழுதுகிறேன். "உண்மைக்குப் பரிந்து பேசும் குணம் நமது நாட்டில் சுருக்கமாய் விட்டமையால் நமது நாடு வீழ்ச்சியடைந்தது" என்று கவிதாகூர் சொன்னபடி, நமது நாட்டுப் படித்தவர்கள், பண்டிதர்கள் இச்சகத்திற்கும் இதத்திற்கும் ஆளாவதுபோல் உண்மைக்கு ஆளாவதில்லை.

"கம்ப இராமாயணம் ஒரு வீர காவியம். கதைகளில் காணும் பாத்திரங்களில் சுர அசுர பாகுபாடின்றி எல்லோரிடமும் ஆண்மை, வீரம் காணப்படுகிறது. இந்த ஆண்மை காரணமாக ஒரு காலத்தில் தமிழ் நாட்டு நாகரிகம் உலகம் போற்றக்கூடியதாக இருந்தது." என்று கல்வி மந்திரி சொன்னார். அது உண்மையே. அந்த நாகரிகம் எங்கே போயிற்று? எப்படிப் போயிற்று? கம்பராமாயணம் வந்தபின் ஆரிய நாகரிகத்துக்குள் அகப்பட்டு அழிந்து

போயிற்று என்பதைக் கல்வி மந்திரி அறிந்திருக்க வேண்டும். இதில் பல விஷயங்களை எடுத்துக் காட்டவேண்டும்.

வடதேசத்திற்கு இராமன் என்னும் இராசாவையும், தென் தேசத்திற்கு இராவணன் என்னும் இராசாவையும்; இராமர், விஷ்ணு அவதாரமென்றும், இராவணன், பிரம்மாவின் பேரப் பிள்ளையென்றும் கற்பித்துக் கதை எழுதினார்கள். அந்தக் கதையில் கல்வி மந்திரி சொன்னபடி சுர அசுர இருதாத்தார் வீரம் மட்டுமல்ல, குரங்குகள், கரடிகள், பட்சிகள் வீரமும், ரிஷி, முனி, பிராமணர் என்பவர்களின் பிராமணச் சாபம் என்கிற வீரமும் சேர்ந்திருக்கிறது. எல்லா ஆண்மை, வீரத்தைக் காட்டிலும் பிராமணச் சாப வீரம் மகா சக்தி வாய்ந்தது. அதைச் சொல்வது தான் இராமாயணம். நேராகச் சொல்லாமல் ரிஷி, முனி, தபசிகள் சாபம் என மறைத்துக் கூறுகிறது. தேவர் ரிஷி, முனி தபசி, வேதம், வேடம் என்பவைகளெல்லாம் பிராமணனையே குறிக்கும். அந்த அர்த்தம் வரும்படியாகவே கதையும் எழுதினார்கள், சொல்லவும் செய்தார்கள். விஷ்ணு இராமாவதாரம் எடுப்பதற்கும் இராவணன் பிறப்பதற்கும், காரணமாக இருந்த கதைகளில் அவை நன்றாகத் தெரியும். பிராமணச் சாபம் மகாவிஷ்ணுவால் கூடப் போக்க முடியாதென்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. இலட்சுமி சிதையாகப் பிறந்ததற்கு நாரத மகாரிஷி சாபம். இராமாயணத்தில் காணும் சமய இதிகாச புராணங்கள் மனித அறிவுக்கு ஒத்து வராமையால் தள்ளப்படும் இந்தக் காலத்தில், சமய வாதங்கள் விஞ்ஞான சாத்திரத்தால் நழுவும் இந்தக் காலத்தில், ஆங்கிலம் படித்துச் சட்டங்கள் தெரிந்து ஆங்கிலேயரிடம் அரசாட்சி ஏற்றுக் கொண்டிருக்கும் நமது கல்வி மந்திரி கம்ப இராமாயணத்திலிருந்து ஒரு புது இந்தியாவைச் சிருஷ்டிக்கப் போகிறேன் என்று சொல்லுகையில், அந்தக் காலத்தில் பிராமணச் சாபத்திற்குப் பயந்து அரசு செய்த மந்திரிகளின் அரசாட்சியில் திராவிடர்களின் நாகரிகம் மங்கிப்போனதில் ஆச்சரியமில்லை.

இராமாயணத்தின் வீரம், ஆண்மையில் முதல் வீரம் இராமனைச் சேர்ந்தது. இராமர் பெரிய தெய்வமான மகாவிஷ்ணு. பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆயிரம் தலைகளையுடைய ஆதி சேஷன் அவதாரம் தம்பி இலட்சுமணன். இந்திரஜித்தைக்

கொல்ல அன்னம், தண்ணீரில்லாமல் பதினுன்கு வருஷம் விரதம் இருந்தவன். பாம்பு பலநாள் ஆகாரமில்லாமல் இருக்குமாம். மகாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷனின் அவதாரமான இலட்சுமணன் எத்தனை நாள் வேண்டுமானுலும் அன்னமில்லா மலிருக்கலாம். சீதையோ இலட்சுமி. இராமருடைய வில்லோ சிவபெருமானுடையது. பாணங்களெல்லாம் ரிஷிகளுடையன. அவைகளை இராமர் 'போ' என்றால் போகும், 'வா' என்றால் வரும். கடைசி நாள் இராம இராவணன் சண்டையில், இராவணன் விடும் பாணங்களெல்லாம் இராமரைக் கண்டு ஓடி விடுகையில், இரா வணன், இராமனை "இவன் மும்மூர்த்திகள் அல்ல, மும்மூர்த்தி களிடம் சண்டை போட்டிருக்கிறேன, அவர்களுடைய சக்தி எனக்குத் தெரியும், தவசு செய்து வரம்பெற வயதுமில்லை. ஆத லால் வேதத்திற்கு முதற் காரணமான ஆதிதெய்வம் இந்த இரா மன் தான்" என்று சொன்னுன். இராமர் வேதத்திற்குக் காரணம் என்றும், ஆதி தெய்வமென்றும் கம்பர் பாடாவிட்டால் சீரங்கத்து ஐயங்கார்கள் கம்ப இராமாயணத்தை ஒத்துக்கொள்ள மாட்டார் கள். அந்த ஆதிதெய்வத்தின் வீரத்தை நாம் கற்றுக் கொள்வது எப்படி? அது நமக்கு எவ்விதம் வரும்? வந்திருந்தாலும் இரா மாயணம் எழுதிய பின் பல நூற்றுண்டுகளாகப் பல சதிகாரர் களால் அடிபட்டுச் சீரழிகிறோமே! ஒரு பாணமாவது கற்றுக் கொண்டோமா? கற்றுக்கொண்டு நம்முடைய சீரழிவைத் தடுத் தோமா? இல்லை. எனவே அவ்வீரம் நமக்கு உபயோகப்படாது, எவ்வளவோ காலமாகியும் உபயோகப்படவில்லை.

கல்வி மந்திரி அவர்கள் இராமாயணம் படித்திருப்பார். "அந்தணர்களைப் பேணுதி உள்ளத்தால்" என்றதையும் இராமர் தன் பொருளை யெல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துத் தன் மனைவியின் பொருளையும் கொடுக்கச் செய்து மற்றவர்களையும் அவ்வழியிலேயே நடக்கவுஞ் செய்த இராமாயண வீரமும் தெரிந் திருப்பார். இராமாவதாரம் எடுப்பதற்கு முன் மகாவிஷ்ணு சொன்னதைப் படித்திருக்க மாட்டார். தன் வீர ஆண்மையைக் காட்டவும் அதை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் அவர்கள் கற் றுக் கொள்ளவுமேதான் பூலோகத்திற்குப் போவதாக மகா விஷ்ணு சொல்லவேயில்லை. வேதத்தைக் காப்பாற்றி, வேத

வேள்விகளுக்கு விரோதிகளா யிருப்பவர்களைக் கொன்று, ரிஷிகளை ரட்சித்துத் தேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகம் சரியாகச் சேர்ப்பதற்காகவேதான் அவதாரம் எடுப்பதாகச் சொன்னார். வேதம், ரிஷி, வேள்வி, தேவர்கள் என்றால், அது பிராமணர்களைத்தானே குறிக்கும். ஆகவே இராமாயணத்திலிருக்கும் இராமருடைய வீர ஆண்மை மனிதனுடையதல்ல; மனிதன் கற்றுக் கொள்ளவும் முடியாது; அவைகளெல்லாம் கற்பனை உலகத்தில் கவிகளின் சஞ்சாரம். ஆனாலும் இராமாயணம் எதற்காக எழுதப்பட்டதோ அந்த வீர ஆண்மையைக் கற்றுக்கொண்டோம். இராமபஜனை, நாமம், துளசி மாலை, உண்டியல், பெருமாள் பிரசாதம், ஊர் ஊராய் அர்ச்சனை, வரி இவைகளெல்லாம் சேர்ந்த மோட்சம் ஆகிய இவைகள்தான் இந்த வீர ஆண்மையால் உண்டாயின. அதன் பலன் அன்னியரால் உதையும் குத்தும்பட்டு, ஆணும் பெண்ணும் அங்குமிங்கும் ஓடி, இராமா, அரங்கா, கோவிந்தா என்று கூப்பாடு போட்டுக் கட்டி அழுவதற்கு வீர ஆண்மை வந்ததே யல்லாமல், மனிதனுக்கு மனிதன் சமமாக நிற்கும் வீரம் வரவில்லை. கம்ப இராமாயணம் இராமனைத் தெய்வமாக்கவும் பிராமணர்களை உயர்விக்கவுமே தோன்றியது.

இனி இரண்டாவது வீரம் இராட்சதர்களுடையது. அதையும் பார்ப்போம். மகாவிஷ்ணுவின் காவலாளிகளான விஜயன், ஜெயன் என்கிற துவாரபாலகர்களின் அவதாரம் இராவணன், கும்பகர்ணன் என்போர். இராவணனுக்குப் பத்துத்தலை, இருபது கை. அநேக காலம் தவஞ்செய்து பல் வரங்கள் பெற்றவன். சாகாமலிருக்க அமிர்தகலசம் விழுங்கினவன். திக்குக்கஜங்களைக் கொன்று அவற்றின் கொம்புகளை ஒடித்து அவைகளில இரத்தினங்களைப் பதித்து மார்பில் ஆபரணமாகப் பூண்டவன். சிவபெருமானின் உறைவிடமான கைலையங்கிரியைத் தூக்கினவன். மூன்றரைக்கோடி வயதில் ஐம்பது இலட்சவருடம் வாழ்ந்தவன். பிரம்மாவின் பேரப்பிள்ளை. கும்பகர்ணனும் பிரம்மாவின் பேரப்பிள்ளையே. பெருத்ததேகம், தோள் ஆயிரக்கணக்கான யோசனை தூரமுடியாது. ஆறு மாதம் தூங்குவான். ஆறு மாதம் விழித்திருப்பான். அவனுக்கும் அனுமனுக்கும் நடந்த சண்டையில் அனுமன் தோற்றபோது ஆதிமூல இராமனின் கோதண்டமே அவனைக் கொல்லவேண்டும் என்று

அவனுடைய பலத்தைப் புகழ்ந்திருக்கிறான். பிரம்மாவின் பேரப் பிள்ளைகளும், பருத்த தேகமுடையவர்களும், பெருத்த தவஞ் செய்தவர்களுமான அவர்களுடைய வீரம் நமக்கு வருமா? அதன் அர்த்தம்தான் தெரியுமா? இராமாயணத்தில் இராமருடைய வீர ஆண்மையைப் பற்றிப் பண்டிதன் கூறுகையில் கை எடுத்துக் கும்பிடவும், கன்னத்தில் போட்டுக் கொள்ளவுமே செய்வார்கள்; அது தெய்வபக்தியாகவே முடியும். இராட்சதர்களின் வீரஆண்மை காணுமிடத்திலெல்லாம் துஷ்டர்கள், பாவிகள், செய்யும் செய்கை என்றுதான் முடிப்பார்கள். ஒரு வீர ஆண்மை பய பக்திக்கும், ஒரு வீரஆண்மை கொடுஞ் செய்கைக்கும், ஏற்படுத்தி விட்டபிறகு, பின் இராமாபணத்தில், எந்த—எப்படிப்பட்ட வீர ஆண்மை இருக்கிறது? ஒன்றுமில்லை.

கல்விமந்திரி அவிஞசியார் அவர்கள் இராமாயணம் முன்னோர் கொடுத்த பொக்கிஷம்; அது வீர காவியம்; அதிலிருக்கும் வீரமும் ஆண்மையும் வேண்டும். அதிலிருந்து ஒரு புது இந்தியாவையுண்டாக்கப் போகிறோம் என்றார். நாங்கள் இராமாயணத்தைக் குற்றஞ் சொல்லுகிறவர்கள். கல்விமந்திரி சொன்னதும் சரியல்ல என்றும் சொல்கிறோம். நாம் சொல்லும் குற்றம் விசாரித்தறியும் புத்திக்குப் பொருந்துகிறதா? அல்லது மதிக்குப்புறத்தே தள்ளப் பட வேண்டியதா? என்பதைச் சிந்தனைசக்தியுடையவர்கள் ஆலோசித்துப் பார்க்கட்டும்.

(7)

ஆதிசேஷன் பாதாளலோகத்தின் அதிபதி. பாதாளலோகத்தில் இரத்தினக் களஞ்சியங்கள் குவிந்து கிடக்கின்றன. இரத்தினங்கள் நமக்கும் வேண்டும். நாம் அவைகளை எடுத்துவரும்படியான வீரம் நம்மிடம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. அந்த வீரத்தை இராமாயணம் கொடுத்ததா? இராமர் அவருடைய பக்தர்கள் யாருக்காவது கடாட்சித்தாரா? அதுவுமில்லை. பாதாள லோகத்திலிருக்கும் இரத்தினங்களை எடுத்து வரும் வீர ஆண்மை உடையவர்களும் அவர்களைப் பற்றின கவிகளும் தான் இராமாயணத்தில் நிறைந்திருக்கின்றன. அவைகளால் நமக்கென்ன பலன்? வாலி, முன்னரே பாதாளத்திற்குப் போய் சண்டை போட்டவன்.

வாலி இரத்தினங்களை வாரிக்கொண்டு வரலாம். அந்த வழி சுக்ரீவனுக்குக்கூடத் தெரியலாம். அனுமாரும் அதைச் செய்திருக்கலாம். அனுமாரும் பாதாளலோகம் போய் வந்தாரே. கருடபகவானுக்கு இராமர் உத்தரவிட்டால் அவன் ஆதிஷேஷனை மூக்கில் கொத்திவந்து இராமர் பாதத்தில் வைத்துவிடுவான். இராமருக்குக்கோபம்வந்து வில்லில் அம்பைப் பூட்டினால் ஆதிசேஷன் பயந்து வந்து இராமர் பாதத்தில் விழுந்துவிடுவான். இராவணனுக்குப் பாதாளலோகத்து இரத்தினங்கள் வேண்டுமானால் மகன் இந்திரசித்தனிடம் சொல்லி விட்டால் பிரம்மாஸ்திரத்தால் ஆதிசேஷனைக் கட்டிவந்து இராவணன் முன்னால் நிறுத்தி விடுவான். பாதாளலோகமும் தெய்வலோகமும் இராட்சதர்களுக்குச் சாதாரணப் போக்குவரத்துடைய இடங்கள். ஒரு இராட்சதன் போனால் எவ்வளவு இரத்தினங்கள் வேண்டுமானாலும் வாரிக்கொண்டு வரலாம். இராவணன் பேரைக்கேட்டால் ஆதிசேஷன் படமெடுத்து ஆடமாட்டான். இந்த வீரங்களும் இதற்கு மேற்பட்ட ஆண்மைகளும் இராமாயணத்திலிருக்கிறதென்று கல்விமந்திரி சொல்வதை நாம் மறுக்கவில்லை. அந்த வீரமும் ஆண்மையும் நமக்கெப்படி வரும்? நமக்கென்ன செய்தது? இராமருக்கு அநேகபக்தர்கள் இருந்தார்கள். இன்னும் அநேகர் இருக்கிறார்கள். கூடப்பேசின பக்தர்கள், அருள் பெற்ற பக்தர்கள், இராமசைதன்யமே அவதாரமாக வந்தபக்தர்கள் இன்னும் பலவிதமான பக்தர்கள் இருந்தார்களே. எந்தப்பக்தனுக்காவது அந்த வீர ஆண்மை வந்திருக்கிறதா? அருள் அளித்தாரா? இராமரோ உடலை இங்கே போட்டுவிட்டு வைகுண்டம்போய் விட்டார். சிரஞ்சீவியாகத்தானே அனுமார் இன்றும் இங்கே இருக்கிறார் என்பது பக்தர்களின் வீர நம்பிக்கை. அவராவது அந்த வீர ஆண்மையின் வழியைச் சொன்னாரா? அனுமான் உபாசனையுடையவர்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே, அவர்களுக்காவது அனுமார் ஆசிர்வதித்தாரா? சனி மாலையிலும், ஞாயிறுகாலையிலும், சேவைதரும் கருடபகவானாவது அந்த வீர ஆண்மையைக் கற்றுக்கொடுத்தாரா? இல்லையே! கற்றுக்கொள்ளும் மார்க்கத்தையும் கல்விமந்திரி சொல்லவில்லை. பாற்கடல், நெய்க்கடல், இருந்தும் நமக்கென்னபயன்? நமக்கும் இரத்தினங்கள் வேண்டும், வேண்டுமானால் பூமியைத் தோண்டிப், பாறையை உடைத்து, அதிலுள்ள இரத்தினக்கற்களை எடுத்துச், சாணைக்குக்

கொடுத்து, உருப்படியாக்கி, அழகு பெறச்செய்து கொள்ள வேண்டும். பூமிக்குள் இரத்தினங்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பவர்கள் தொழிலாளிகள். இராமாயணத் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறவர்களுக்குக் கல்விமந்திரி சொல்வது போல் இராமாயணம் முன்னோர் கொடுத்த பொக்கிஷம் என்பதில் சந்தேகமில்லை. மற்றவர்களுக்கு என்னபலன்?

இராமர், இராவணன் இவர்களுடைய ஆண்மைகளைச் சொன்னேன். அவைகள் நமக்கு உபயோகப்படாதென்றும் சொன்னேன். இப்போது குரங்குகளின் வீர ஆண்மையையும், பிராமணச் சாபத்தின் வீரத்தையும் சொல்கிறேன்.

குரங்குகளுக்கு இராசா வாலி, வானரசேனை எழுபது வெள்ளம், ஆனை ஆயிரம், தேர்பதினாயிரம், அடல்பரி ஒருகோடி, வீரர்கள் ஆயிரக்கணக்கில. இப்படி நூறுகொண்டது ஒரு பதாதி, பதாதி நூறுகொண்டது ஒரு அக்ரோணி, அக்ரோணி நூறுகொண்டது ஒருவெள்ளம். இப்படி எழுபது வெள்ளம் குரங்குசேனை. இராட்சத சேனைமட்டும் இரண்டாயிரவெள்ளம். இத்தனை சேனைகளும் அந்த இலங்கையில் எப்படித் தங்கினவோ? சண்டை போட்ட களத்தின் அளவுதான் என்னவோ? ஆகாரம் எங்கிருந்து கிடைத்ததோ? காமதேனுவும், கற்பகவிருட்சமும் கொடுத்திருக்கலாம்! இமயமலையின அடிவாரத்தில் பார்வதிக்கு ஒரு நந்தவனமிருந்தது. அதிலுள்ள குளத்தில் ஒரு ஆண்குரங்கு தவறி விழுந்துவிட்டது. அது பெண் குரங்காய்விட்டது. இந்தப் பெண் குரங்கைத் தெய்வலோகத்திலிருந்த தேவேந்திரன் கண்டு மோகித்தான். உடனே வாலி பிறந்தான். அந்தப் பெண் குரங்கையே சூரியன் கண்டு மோகிக்க உடனே சுக்ரீவன் பிறந்தான். பார்வதியும் பரமேசுவரனும் குரங்கு ரூபமெடுத்து அநேக காலம் சுகித்திருந்தார்கள். அந்தச் சுகரசத்தை வாயுபகவான் எடுத்துவந்து அஞ்சனை என்ற ஒரு இராட்சதப் பெண்ணுக்குக் கொடுத்தான். அவள் அதைச் சாப்பிட்டு அனுமானைப் பெற்றாள். சாம்புவந்தர் பிரம்மாவின் அவதாரம். இப்படியே குரங்குகளெல்லாம் தேவ அவதாரங்கள். இராமர், தேவர்களிடம், தான் இராமராக அவதாரம் எடுக்கப்போவதாகவும் அவர்களைக் குரங்குகளாகக் கிஷ்கிந்தையில்

இருக்கும்படியும் சொன்னார். குரங்குகள் என்றால் சாதாரணக் குரங்குகளா? தேவ அவதாரக் குரங்குகளல்லவா? கைலயங்கிரியிலிருந்து பூலோகத்துக்கு வந்து நமது கோயில்கள் பலவற்றுள் எழுந்தருளியிருந்துகொண்டு நமக்குக் காட்சியளிக்கும் சிவபெருமானின் சிற்றின்பத்தின் விளைவு அல்லவா! ஒரு குரங்கு செத்தவர்கள் பிழைப்பதற்கு மருந்து கொண்டுவரச் சொல்கிறது. அது இருக்கிற இடமும் வழியும் சொல்லி அனுப்புகிறது. ஒரு குரங்கு மருந்துள்ள மலையை வேரோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு வருகிறது. அந்தக் குரங்கைத் தெய்வமாக்கினோம், கும்பிட்டோம், காங்கிரஸ் கொடியிலும் ஏற்றினோம். அடைந்த பலன் என்ன? அந்தக் குரங்கு இன்னும் உயிரோடிருப்பதாகத்தானே கம்ப இராமாயணப் பொக்கிஷம் சொல்கிறது! அந்தச் சஞ்சீவி மருந்தை நமக்குச் சொல்லிக் கொடுத்ததா? அதற்கு வழிதான் காட்டிற்று? எனவே அந்த வீர ஆண்மை எல்லாம் நமக்கு உபயோகப்படாதென்று சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன்.

இனிப் பிராமணச் சாப வீரத்தைப் பார்ப்போம். விஷ்ணுவே இராமராக அவதாரமெடுக்கக் காரணமாயிருந்தது ரிஷிகள் சாபம் என்று இதிகாசங்கள் சொல்லுகின்றன. அந்த ரிஷி அப்படிச் சாபம் தந்தார், இந்த ரிஷி இப்படிச் சாபம் கொடுத்தார்! தேவேந்திரனுக்குச் சாபம் கொடுத்தார், வைகுண்டம் சென்றார், விஷ்ணு மரியாதை செய்தார், இலட்சுமியை ஆசிர்வதித்தார், என்கிற கதைகளையே இதிகாச புராணங்களில் எழுதிப் பிரசங்கம் செய்து மக்களின் மனதில் செலுத்திவிட்டமையால் மக்கள் பிராமணச் சாபம் என்பதற்குப் பயந்துவிட்டார்கள். அதனாலேயே கண்ட பிராமணனை யெல்லாம் 'சாமி' என்று கும்பிட்டார்கள். அந்தப் பயம்தான் இனியும் 'சாமி' என்று கூப்பிடச் செய்கிறது. நாம் தனியாக இருந்து தெய்வத்தைக் கும்பிட்டால் பிராமணப் பிள்ளைகள் செத்துப் போய்விடும். பின், தெய்வத்தைக் கும்பிடுகிறவனின் தலையை வெட்டினால் பிராமணப் பிள்ளை பிழைத்துக் கொள்ளும்! இதை இராமரே நடத்திக்காட்டினார்! அவரே நடத்திக் காட்டினமையால் அதைப் பின்பற்றி இந்து இராசாக்கள் அநேகம் தலைகளை வெட்டினார்கள். அந்தப் பயமும் சேர்ந்து சன சமூகத்தை முதுகெலும்பற்ற புழுக்களாக்கி விட்டது. நமது கல்வி மந்திரியோ

இனியும் இராமாயணம் படிக்கச் சொல்கிறார். அதிலிருந்து புது இந்தியாவைச் சிருஷ்டிக்கப் போகிறார். அந்தச் சிருஷ்டி இன்னும் உள்ள எலும்புகளையும் முறித்துவிடுமோ? அரிசியும் உளுந்தும் நெய்யும் மலிவடைந்தபின் அக்கார அடிசலும், ஆமைவடையும் அலைந்து திரியுமோ? எல்லாம் பொறுத்துப் பார்ப்போம்.

(8)

தங்கள் மதஸ்தர்களாலும், அன்னிய மதஸ்தர்களாலும் அடிபட்டு, பீதியுண்டு, அறிவு கெட்டுக்கிடக்கும் நமது சமூகத்தை ஒன்று சேர்த்து ஒருமைப்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதுதான் நமது பண்டிதர்கள் வேலையாக இருக்கவேண்டுமேயல்லாமல், ஆலோசனையில்லாத நமது சமூகத்திற்கு அறிவில் செல்லவிடாத ஏமாற்றுப்பொய்ப் பிரசங்கங்களைச் செய்வதும், தமோ குணத்தூக்கத்தையே விருத்திசெய்யக்கூடிய புராணப் பொய்க்கதைகளைச் சொல்வதும்; பாமர சனங்களுக்கு எது ருசியென்று இதிகாசங்களைத் தேடிக்கொண்டிருப்பதும், பழைய அந்தகார நிலையைச் சிறந்ததென்று புகழ்வதும், புராணத்திற்குப் புராணம் சாட்சியென்று சொல்வதுமான குறுகிய உள்ளத்தின் சஞ்சாரத்திலிருப்பதையே கூடாதென்று சொல்லுகிறேன்.

ஊண், உறக்கம், ஊடல் எல்லா உயிர்களுக்கும் பொது, சமம். வியாதியோ, வயோதிகமோ, மற்றச் சமய சந்தர்ப்ப பேதமோ, உண்டான இடத்தில்தான் அம்மூன்றின் தொழில் தடைப்படும், மற்றெதனாலும் தடைப்படாது. ஞானம், கல்வி, கட்டுப்பாடு முதலியவைகளெல்லாம் அவைகளின் துன்பங்களைப் போக்கவேயாகும். பெண்கள் கற்பைப்பற்றியே பேசப்படுகின்றது. தொன்றுதொட்டு ஆண்கள் பெண்களின் கற்பைக்காப்பதென்றே வழக்கத்திலிருந்து வருகிறது. இது, ஆண்களின் பலத்திற்கும் சுகத்திற்கும் ஏற்பட்டதுமட்டுமல்ல, இயற்கையும் இடம் கொடுக்கிறது. சிலமிருகங்களும், பட்சிகளும் பெண்கள் கற்பையே காப்பாற்றுகின்றன. பெண்கள் கற்பைக் காப்பாற்றுவதே இயற்கை, ஒழுங்குக்கும் உலக வாழ்க்கைக்கும் அனுகூலமாக இருக்கிறது. எப்படியிருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு என்பது ஒன்றுதான். பெண்கள், அன்னிய ஆண்களின் சேர்க்கையில்லாமலிருப்பதே கற்பு எனப்

படுகிறது. பெண்களிற் பலர் அன்னிய ஆண்களின் சேர்க்கை யில்லாமலே வாழ்ந்தார்கள், இன்றும் வாழ்கிறார்கள். பல சந்தர்ப் பங்கள் அவர்களை வழிதவறி நடக்கச் செய்கிறதேயன்றிக், கற்பைப் பற்றிப் பெண்களுக்குத் தெரியும். கற்பின் குணம் பெண்கள் கூடவே பிறக்கின்றது. விலங்கு, பறவைகளின் பெண் இனங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்கின்றன, அன்னிய ஆண்களைப் பக்கத் தில் சேர்க்காது, பலாத்காரத்தை எதிர்த்துச் சண்டை போடும். அவைகளுக்கு எந்தப் பண்டிதனும் பிரசங்கம் செய்யவில்லை. சீதை, திரௌபதை, அருந்ததி அவைகளுக்குத் தெரியாது.

கற்பு என்பது ஒரு இரகசிய விஷயம். உலக சிருஷ்டியின் அற்புதத்தில் ஆடிக்கொண்டிருப்பது. உயிருக்கும், இயற்கைக்கும் உலக வாழ்க்கைக்கும் பந்தப்பட்டது. அறிவைவிட ஞானம் உயர்ந்ததென்பதுபோல எல்லாக் குணத்திற்கும் கற்பு மேம்பட்ட தன்மை உடையது. அதனால் அதைப்பற்றி விவகரிக்கக் கூடாது. கஞ்சியும் கந்தையுமில்லை, ஆச்சாரி, பூசாரி, ஆண்டான், அடிமை அதிகார ஆக்கினைகள் அதற்குமேல் உட்கார்ந்து கொண்டிருக் கின்றன. அதில் பண்டிதன் புத்தி செல்வதில்லை, செல்லுபவர்க ளிடம் சேர்வதுமில்லை. சும்மாயிருப்பதுமில்லை.

இராமாயணத்தைப் புகழ்வதற்குப் பண்டிதர் சேதுப்பிள்ளை கூடச் சீதையைத் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறாரே! இராமர் சீதையைக் காட்டிற்கு வரவேண்டாமென்றும், பரதனுடன் இரு வென்று சொன்னதும், அதற்குச் சீதை பதிலளித்ததும், பிறகு கானகத்தில் மானைப் பிடித்துக் கொடுக்கச் சொன்னதும், இலட்சு மணன் பேச்சைத் தட்டி இராமரிடம் கொஞ்சினதும், மாரீசனை மான் செத்ததும், அதன் சத்தம் கேட்டு இராமரைத் தேடிப் பார்க்க இலட்சுமணரை வேண்டினதும், அவர் மறுத்ததும், அதற்குச் சீதை சொன்ன சுடுசொல்லும், இலங்கையில் அனுமா ரைக் கண்ட சீதை இராமரைப் பற்றிச் சொன்னதும் சீதையின் முக்கிய பாகங்கள். இது, மற்றப் பெண்கள் பேசுவதைக் காட்டி லும் அதிகமாயிருக்க, சீதையிடம் எத்தகைய நல்லகுணம் போட்டி போட்டது? பண்டித அதிர்ச்சியில் அழகாகப் பேசிவிட்டால் போதுமா?

உண்மையைத் தெரிவதற்கே கல்வி. அதைப் படிப்பதே படிப்பு. அந்தப் படிப்பை மறைப்பதே வஞ்சனை. அதை மறைக்கப் பலதைப் பேசுவது பண்டிதர் பெருமையுமன்று.

இராமர் காட்டிற்குப் போகையில் சீதையிடமிருந்த எல்லா நகைகளையும் பிராமணர்களுக்கே கொடுத்துவிடச் சொல்ல, அவள் அப்படியேசெய்தாளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய 'நல்ல குணங்கள்' நம் பெண்கள் கற்றுக்கொண்டதன் பலன்தான் இன்று நாம் அகப்பையும் சட்டியுமாய் அலைவது.

சீதை ஆதிமூலப் பொருளின் மனைவி. மனித உறுப்பில் உதிக்காமல் மண்ணில் உதித்தவள். இந்தக் கற்பிதமான பெண்ணிடமிருந்து என்ன கற்றுக்கொள்ள முடியும்? எப்படிக் கற்றுக் கொள்வது? இராவணன் பலவான், எதற்கும் அஞ்சாதவன், தான் ஆசை கொண்ட பெண்ணை மடியில் வைத்துக்கொண்டு போனான். சீதை, அசோகவனத்தில் அழுதுகொண்டிருந்ததும், இராமன் பிறகு வெற்றி பெற்றதும் கதையில் உள்ளது. அப்படிப்பட்ட இராமர் சீதைபேரில் சந்தேகப்பட்டு எத்தனை சாட்சிகள் சொல்லியும் தீக்குளிக்கச் செய்துங்கூட ஐயம் நீராமல் காட்டிற்கும் அனுப்பினரென்பதைப் பண்டிதர்கள் கவனிக்கவேண்டும்.

தனக்கு ஐந்து புருடர்கள் இருந்தும், கர்ணனிடம் தன் மனம் நாடுகிறதென்றும், ஆண்களே யில்லாவிட்டால் பெண்கள் கற்புடையவர்களா யிருப்பார்களென்று திரௌபதை சொன்னதும், அதற்குக் கிருஷ்ணன் ஒப்புக்கொண்டதும் எத்தகைய கற்பு என்பதைப் பண்டிதர்கள்தான் சொல்லவேண்டும், அத்தகைய கற்பின் பிரசங்கத்தை நிறுத்திவிட வேண்டும்.

சீதை மண்ணில் பிறந்தாள்; திரௌபதை நெருப்பில் பிறந்தாள். இது உண்மையென வைத்துக்கொண்டாலும் இந்த இரண்டு பேர் வாழ்க்கை துக்கமானது. இராமரோ ஆதிமூலப் பொருள். அந்தப் பொருள் ஒரு பெண்ணுக்குப் புருடனாக இருக்கமுடியுமா? எல்லாத் தேசத்துக்கும் ஆதிமூலப் பொருள் ஒன்றுதானே? அது இந்தத் தேசத்தில் மட்டும் ஒரு பெண்ணோடு கூடிவாழ்ந்து வந்தது என்பதில் என்ன உண்மையிருக்க முடியும். கர்ணன், தர்மன்,

வீமன், அர்ச்சுனன் முதலியவர்கள் சூரியன், எமன், தேவேந்திரன், வாயு முதலியவர்களின் பிள்ளைகளாம். இத்தனை பேரும் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு வாழ்ந்தார்களாம். "ஐவருக்கும் பெண்சாதி, அழியாப் பத்தினி" என்று பண்டிதர்கள் பிரசங்கம் செய்தால் பெண்களுக்கு அரை குறையாக இருக்கும் நல்ல எண்ணமும் நலிந்து தானே போகும்.'

இனி, ஆதிமூலப்பொருளின் அவதாரமான பரசுராமரின் தாயாருடைய, கற்பின் நிர்ணயத்தைப் பற்றிச் சொல்கிறேன். பரசுராமரின் தாயார் தண்ணீருக்குப் போனாள். ஆகாயத்தில் கார்த்தவீரியன் பறந்து போகத் தண்ணீரில் அவன் நிழல் தெரிந்தது. அந்த அழகைக் கண்டு ஆச்சரியப்பட, உடனே பதிவிரதா தர்மம் கெட்டுத் தண்ணீர் திரளவில்லை. தகப்பனர் உத்தரவுப்படி பரசுராமர் தன் தாயின் தலையை வெட்டினார். இது அந்த அவதாரத்தின் கற்பின் இலட்சணம். அபூர்வ பொருளைக் கண்டால் ஆச்சரியப்படுவது எவர்க்கும் இயற்கை. கார்த்தவீரிய அர்ச்சுனனுக்கு ஆயிரம் தலை, இரண்டாயிரம் கை, அதைப் பார்த்துப் பூதமோ பைசாசமோ என்று அச்சமும், ஆச்சரியமும் அடைந்திருக்கலாம். அதற்குத் தலைவெட்டுவது தான் பரசுராமர் கற்பின் இலட்சணம். இயற்கைக்கே விரோதம். ஆதிமூலப் பொருளின் அவதாரங்களான இராமன், கிருஷ்ணன், பரசுராமன் ஆகியோரின் கற்பின் தன்மையை எந்தப் பெண்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒப்புக்கொள்ளவும் முடியாது. இந்த மூன்றில் எதை எடுத்துக் கொள்வதென்பதைப் பண்டிதர்கள் தான் சொல்லவேண்டும்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் இந்நான்கு குணங்களே பெண்களுக்குப் பெருமை எனச் சொல்லப்படுகிறது. இந்த நான்கு வகைக் குணங்களும் இன்று தள்ளப்பட்டு வருகின்றன. தள்ளக்கூடியதாகவு மிருக்கின்றன. அச்சம் என்றால் பயம். பெண்கள் எதற்கும் பயப்படக்கூடாது, ஆண்களைப் போலவே எல்லா உத்தியோகங்களையும் வகிக்கவேண்டும், இன்னும் சிப்பாயாக வேண்டும், தற்காப்புக்கு இடுப்பில் பிச்சுவா சொருகிக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். மடம்—அறியாமை, அறியாமைபோலிருத்தல். இதையும் நீக்கிக்கொண்டார்கள். சங்கங்கள் கூட்டவும் அவைகளில் பேசவும், எழுதவும் நல்ல பயிற்சி பெற விரும்புகிறார்கள்.

நாணம், வெட்கம். இதை முழுதும் ஒழித்துவிட்டார்கள். படிக்கவும், பாடவும், ஆடவும் பழகிக் கொள்கிறார்கள். பயிர்ப்பு—அருவருப்பு. இன்று மோட்டார், டிராம், ரயில், சினிமா, நாடகம் முதலிய சாதனங்களால் அருவருப்பு அறவே அண்டுவதில்லை. எனவே இவற்றால் பெண்களின் பெருமைகள் எனப் பேசப்பட்ட மேற்கண்ட நான்கு முறைகளும் இன்று தள்ளப்பட்டு விட்டன. தள்ளப்பட்டே தீரும். இனிக் காவியப் பூச்சும், பண்டிதர் பேச்சும் எங்கும் யாருக்கும் உபயோகப்படாது.

(9)

புராணக் குப்பை கூள உரத்தில்தான் பார்ப்பனர் தோட்டம் விளைகிறது. இது பார்ப்பனருக்குத் தெரியும். பெரிய தேசிய வாதியான இராஜகோபாலாச்சாரியார் புராணக் குப்பையில் முதல் குப்பையான அனுமானை ஏன் விடமாட்டேன் என்கிறார் என்பதின் கருத்தைத் திராவிடத் தேசியவாதிகளுக்குத் தெரியாது. ஒருசமயம் சேலத்தில பண்டாரம் அவர்களின் படத்தைத் திறந்துவைத்த இராஜகோபாலாச்சாரியார், படத்திலிருப்பவர் அனுமானைப்போல ஆற்றலும் உறுதியுமுடையவர் என்றார். அனுமாருக்கு ஆற்றலும் உறுதியும் எங்கிருந்து வந்தது? இராமரையே கும்பிட்டு வணங்கிச் சதா ஸ்மரணை செய்து வந்ததினால். இராமருக்கு அந்தச் சக்தி எங்கிருந்து கிடைத்தது, எதனால் வந்தது? இராமர் பிராமணர்கள் கூட்டத்திலிருந்து வேத விசாரணை செய்து பிராமணர்களுக்கு வேண்டியது கொடுத்து அவர்கள் ஆசிர்வாதம் பெற்றுத் தரும உபதேசம் கேட்டு அதை நடத்தி வந்ததனால். யாருக்கு அனுமானைப்போல் ஆற்றலும் உறுதியும் வேண்டுமோ, அவர்களுக்குப் பிராமணர்கள் ஆசிர்வாதம் வேண்டும். அதற்காகத்தான் இராஜகோபாலாச்சாரியார் போகுமிடமெல்லாம் அனுமாரைக் கூட்டிக் கொண்டு போகிறார். ஆச்சாரியாரின் பேச்சைக் கேட்காவிட்டாலோ தலை சிறிதும் உடம்பு பெரிதும் ஆகிவிடுகிறதே. அதற்குப் பயந்தாவது இராஜகோபாலாச்சாரியாரின் நியாயங்களையும், உபமானங்களையும் ஒத்துக்கொள்ளுவதென்றாலும், புராணம்தானே அனுமானை ஆச்சாரியாருக்கும் நமக்கும் அறிமுகப்படுத்தியது. புராணத்தில் கண்டபடி ஒரு அனுமான் இருக்கவே முடியாது. புராணத்

தில் கண்டபடி அனுமானின் உற்பத்தியைச் சொல்லுகிறேன், அதிலிருந்து அனுமானைத் தீர்மானம் பண்ணுங்கள்.

கேசரி என்கிற ஒரு இராட்சதனுக்கு அஞ்சனை என்கிற மகளிருந்தாள். அந்தப் பெண்ணைக் கேசரி என்கிற வானர அரசனுக்குக் கலியாணம் செய்துகொடுத்தான். கேசரி என்கிற வானரமும் அஞ்சனை என்கிற இராட்சதப் பெண்ணும் அநேககாலம் வாழ்ந்தார்கள், குழந்தை இல்லை. அஞ்சனை தவசு செய்யப் போய் விட்டாள். அவளுக்குச் சிசுருஷை செய்துகொண்டு வாயுபகவான் அவளோடு இருந்தார். அந்தச் சமயம் பரமேஸ்வரனும் பார்வதியும் உலகசஞ்சாரம் செய்து திருப்பதி என்கிற திருவேங்கட மலைக்கு வந்தார்கள். அங்கே குரங்குகள் ஆணும் பெண்ணும் கூடிக் குலாவிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். இவர்களுக்கும் இச்சை யுண்டாயிற்று. சுவாமியும் அம்மனும் குரங்கு ரூபமெடுத்துக் கூடினார்கள். அதில் சிந்தின இந்திரியத்தை ஒரு இலையில் பிடித்து வைத்தார்கள். அதை வாயுபகவான் அஞ்சனைக்குக் கொண்டுபோய்க் கொடுத்தார். அவள் அதைச் சாப்பிட்டாள். அனுமார் பிறந்தார். பிறந்த உடனே பசியுண்டாயிற்று. சூரியனைக் கனி என்று கவ்வப்போனார். வெப்பத்தால் கீழே விழுந்துவிட்டார். வாயுபகவானுக்குக் கோபம் பிறந்து எங்கும் காற்றே இல்லாமல் செய்துவிட்டார். பின் தேவர்களும் பிரம்மாவும் வந்து அனுமாரை எழுப்பிச் சமாதானம் செய்தார்கள். பின் சூரியனிடம் வித்தை கற்றுக்கொள்ள விரும்பினர். 'நான் ஒரு வினாடிக்கு எத்தனையோ மைல் சஞ்சாரம் செய்கிறேன்; என்னோடு நீயும் தொடர்ந்துவந்தால் வித்தை சொல்லிக் கொடுக்கிறேன்' என்று சூரியன் சொன்னான். அப்படியே சூரியன் கூட அனுமார் சஞ்சாரம் செய்து வித்தை கற்றுக்கொண்டார். இந்த அனுமாரைத்தான் புராணத்தில் கண்டோம். வேறு அனுமார் எங்கும் காணப்படவில்லை. அனுமாருடைய தாயாரோ இராட்சதப் பெண். தாயாருடைய புருஷனோ குரங்கு. சுக்கிலமோ சிவபெருமானுடையது. அதைத் தன்னிடமிருந்து பிடித்து வைத்தவளோ பார்வதி. அதைக் கொண்டுபோய் அஞ்சனைக்குக் கொடுத்ததோ வாயுபகவான். அதை வாயில் உண்டு பிள்ளை பெற்றதோ அஞ்சனாதேவி. அந்த அனுமார் பிறந்தவுடன் கனி என்று சூரியனைக் கவ்விக் கீழே

விழுந்து மூர்ச்சையடைந்து பிரம்மாவால் பிழைக்கப்பட்டுச் சிரஞ்சிவி பெற்றுச் சூரியனுடன் சஞ்சாரம் செய்து வித்தை கற்று இன்றும் இராமஜெபம் செய்துகொண்டு இராஜகோபாலாச்சாரியாருக்குப் பக்கத்துணையாய்க் கூடவே இருக்கிறார். இப்படி ஒரு அனுமார் இருப்பாரா? இருக்கமுடியுமா? என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

தேவர்கள் எப்பொழுதும் அழியாம லிருப்பதற்கு என்ன செய்வது என்று ஆலோசித்துத் திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்து உண்டால் அழிவில்லை என்று தெரிந்தார்கள். அது தங்கள் கூட்டத்தாரால் மாத்திரம் முடியாத காரியம். அதனால் அசுரர்களும் தேவர்களும் கூடி ஆலோசித்து மகா மேருவை மத்தாகவும், கார்க்கோடகன் என்னும் பாம்பைக் கயிருகவும், பாற்கடலில் போட்டுக் கடைந்து அமிர்தம் எடுக்கலாம் என்று தீர்மானம் பண்ணி, கார்க்கோடகனின் தலைப்பக்கம் அசுரர்களைப் பிடிக்கும்படியாய்ச் செய்து, தாங்கள் வால் பக்கம் பிடித்துப் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தார்கள். அதை அசுரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கத் தேவர்களுக்கு மனம் வரவில்லை. அதனால் சச்சரவு ஏற்பட்டது. அதைத் தெரிந்து மகாவிஷ்ணு அழகான பெண் ரூபமெடுத்து அங்கே வந்து சங்கதியை விசாரித்துத்தான் எல்லாருக்கும் சமமாகப் பங்கு போட்டுப் பரிமாறிக் கொடுப்பதாகத் தேவர்களை ஒருபக்கமும் அசுரர்களை மற்றொரு பக்கமும் இரண்டு வரிசையாக உட்காரும்படி சொல்ல, அவர்களும் அப்படியே உட்கார்ந்தார்கள். மகாவிஷ்ணுவான பெண் அசுரர்களைப் பார்த்து அமிர்தம் சாப்பிடுவதற்குத் தேகம் சுத்தமாக யிருக்கவேண்டும், நீங்கள் தேக சுத்தமில்லாம லிருக்கிறீர்கள், ஆனதால தேகத்தைச் சுத்தம் செய்து வாருங்கள் என்று அசுரர்களை அனுப்பிவிட்டு, அவர்கள் தேக சுத்தம் செய்து வருவதற்குள் தேவர்களுக்கு அமிர்தத்தை எல்லாம் கொடுத்துவிட்டாள். அசுரர்கள் வந்து பார்த்து விஷ்ணுவின் வஞ்சனையையும் தேவர்கள் ஏமாற்றியதையும் தெரிந்து கோபித்தார்கள். சண்டைக்குப் போனார்கள். அங்கொருவருமில்லை. எல்லோரும் ஓடிப்போய் விட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவங்களால்தான் விஷ்ணுவையும் தேவர்களையும் அசுரர்கள் பகைத்துச் சண்டைபோட்டு வந்தார்

கள். இப்படியே இருக்கும் புராணக் கதைகள். புராணம் எல்லாருக்கும் பொதுத்தான். அதிலுள்ள வஞ்சகங்கள், ஏமாற்று முதலியவைகளைப் பிராமணர்கள் கற்றுத் தெரிந்து அனுபவப்படுத்திக் கொள்வார்கள். அந்த இடத்திலெல்லாம் தெய்வத்தையும் ரிஷியையும் வைத்துவிடுவார்கள். நமக்கோ, ஏமாற்றுக்கும் வஞ்சனைக்கும் ஆளாகிறவனுக்குச் சொல்லவேண்டிய பக்திகளையும் நியாயங்களையும் சொல்லுவார்கள். நாமும் அதில் வயப்பட்டு அங்கீகரிப்போம், அதிலே பழக்கப்பட்டுப் பழகியுமிருக்கிறோம். ஏனெனில் தெய்வங்களும் ரிஷிகளுமல்லவா நமக்கும் பிராமணர்களுக்கும் குறுக்கே நின்று வழி திருப்பி விடுகிறார்கள். ஏமாற்றும், சூதும், செய்யவேண்டிய இடத்திலெல்லாம் தெய்வம் பிராமண வேஷத்துடன் வந்ததாகத்தானே புராணங்கள் சொல்லுகின்றன. புராணங்கள் எல்லாருக்கும் ஒன்றாயிருந்தாலும், அவர்கள் உபயோகம் வேறு. நமது உபயோகம் வேறு. புராணத்திலுள்ள ஏமாற்றின் பலன் பிராமணனுக்கு. ஏமாற்றும் கடவுளின் பக்தி விஸ்வாசம் நமக்கு. பிராமணருக்குப் புராணம் பிரமாணமல்ல. நமக்காகச் சொல்லப்பட்டதென்று அவர்களே சொல்லுகிறார்கள். புராண பாடத்தை எப்பொழுதும் நாம் படித்துக்கொண்டே யிருக்க வேண்டுமென்று பிராமணர்கள் நினைக்கிறார்கள். புராதன ஹிந்து தருமங்களும் கலைகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்கிறார்கள். பிராமணன் அறிவுக் கலையைப் படித்து அறிவாளியாகவும், மற்றவர்கள் புராணங்களைப் படித்துப் பிரயோஜனமில்லாத வீண்கிரிகைகளைத் தெரிந்து பகுத்தறிவற்று என்றைக்கும் முட்டாளாகவே இருக்கவேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம். அதற்காகத்தான் இராஜகோபாலாச்சாரியார் இராமாயணத்தையும் பாரதத்தையும் நமக்குத் தெரியப்படுத்திக்கொண்டே யிருக்கிறார். பிராமணத் தேசியப் பத்திரிகைகளெல்லாம் புராணங்களையே எழுதுகின்றன. இராஜகோபாலாச்சாரியாரைப் போன்று படிப்பும் புத்தியுமுடைய மற்ற நாட்டுத் தேசியவாதிகள் புராணப் பொய்க் கதைகளை எழுதும் வேலையிலா இருக்கிறார்கள்?

(10)

நமது தென்னாட்டு முதன்மை வாய்ந்த பத்திரிகைகளும், சுயராஜ்யத்தை நடத்தும் மந்திரியும், அவர் முன்னணிப் பத்திரிகை

களும் பின்னணிக் கூட்டமும் புராணக் கதைகளையும் அதில் காணும் கற்பனா புருஷர்களையும் உபமானம் காட்டியும், சொல்லியும், எழுதியும் வருகிறார்களே! இதற்குக் காரணமென்ன? அந்தக் கதைகளும் அதன் உபமானங்களு மில்லாவிட்டால் சுயராஜ்யம் நிலைக்காதா? புராண உபமானங்களும், தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதித்து வஞ்சித்து வந்த படிப்பும் குணமும் புத்திசாலித்தனமும் நமது நாட்டில் ஒழிந்துபோக வேண்டுமென்று சுயமரியாதைச் சங்கத்தார் சொல்லுவது குற்றமாகுமா?

என்ன பயனுண்டு?

மற்றெல்லாத் தேசங்களிலும் மந்திரிகளுமுண்டு; அவர்களுக்குப் புராணக் கதைகளுமுண்டு; அவர்களும் எத்தனையோ காரியங்கள் செய்திருக்கிறார்கள்; செய்கிறார்கள்; பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். நமது நாட்டு மந்திரியைப்போல அறிவிற்கு ஒத்துவராததும் இப்பொழுதுள்ள உலகப் பொது மனித அறிவிற்கு அருவருக்கத்தக்கதும் யாதொரு பிரயோஜனமு மில்லாததுமான உபமானங்களைச் சொல்லுவதில்லை. ஏன்? இவர்கள் பழைய சாஸ்திரக் கட்டளைகளையும் குருக்கள் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தளையையும் வெட்டித் தன்மதிப்பைக் காத்துக்கொண்ட ஜாதிகளைச் சேர்ந்தவர்கள். நமது மந்திரிகளோ இப்பொழுது ஜனசமூகத்திற்கு வந்திருக்கும் சிறிது பகுத்தறிவையும் கெடுக்கப் புராணக் கதைகளின் உபமானங்களைச் சொல்லி மௌடீகத்தை இனியும் விர்த்தி செய்து, அதன் வழியில் பணக்காரர்களைத் தள்ளிப் படித்தவர்களை அவர்கள்மேல் தள்ளி; அதற்கு மேல் தாங்கள் உட்கார வழி தேடுகிறார்கள். இதைத் தவிர இதனால் இந்தக் காலத்துச் சுயராஜ்யத்திற்கும் சமுதாயத்திற்கும் உபயோகமுண்டா?

வானரங்கள் தேவர் அவதாரம்

சாம்புவந்தர் என்கிற கரடிமுகக் குரங்கு பிர்மாவின் அவதாரம். நீலன், எமதர்மராஜா, நளன், விஸ்வகர்மா, குமுகன், குமுதாக்கன், அஸ்வனி தேவர்கள், துமிதன், துந்துமி, பிதிர்

தேவதைகள் ஆக மற்றெல்லா வானரங்களும் தேவர்களின் தாரங்கள். 42 மந்திரிகள் 70 சேனாதிபதிகள், இவர்களை சேர்த்து எழுபது வெள்ளம் கொண்டது வானரசேனை. யா... ஆயிரம், தேர் பதினாயிரம், அடல்பரி ஒருகோடி, சேனைக் காவலர் பத்து நூறு ஆயிரத்தாயிரம் இவ்வளவும் கொண்டது ஒரு பதாதி. இது நூறுகொண்டது ஒரு அக்ரோணி. நூறு அக்ரோணி கொண்டது ஒருவெள்ளம். இந்த வெள்ளம் எழுபது கொண்டது வானர சேனை. இந்தச் சேனைகளெல்லாம் கிஷ்கிந்தா மலையிலுள்ள காய் கனிகளை உண்டு ஜீவித்து வந்தன. இத்தனைக்கும் பெண்ஜாதி பிள்ளைகளுண்டு. வாலி தேவேந்திரன் பிள்ளையானதினால் தெய்வ லோகத்திலிருந்து பழ வகைகள் வந்திருக்கலாம். விவசாய நிபுணர் களும் விவசாயப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டு, டாக்டர்கள் பழமே சாப்பிடவேண்டுமென்று சொல்லிவந்தும் காசுக்கொரு வாழைப்பழமும் கிடைப்பதில்லை. இந்தப் பெரும் சேனை வெள்ளக் குரங்குகளுக்குக் கிஷ்கிந்தையில் பழம் கிழங்குகள் கிடைத்திருக் காது; தெய்வலோகத்திலிருந்து தேவேந்திரன் அனுப்பியிருக்க வேண்டும். அல்லது அனுமார் வாயுபகவானின் பிள்ளையாயிற்றே, வாயுவையே சாப்பாடாகக் கொடுத்திருக்க வேண்டும்.

இப்படி ஒரு அநுமார் இருப்பாரா? இருக்கமுடியுமா? நமது நாட்டில் அன்னியர் படைஎடுப்பு ஆரம்பித்துப் பலநூறு வருடங்க ளாயிற்றே. இந்த அநுமானால் புளிச் சோற்றுக்கும் தயிர்ச் சோற் றுக்கும், அக்கார அடிசிலுக்கும் நமது ஆச்சாரிகளுக்கும் அவர்கள் சிஷ்ய கோடிகளுக்கும் நாக்கு நீண்டதேயல்லாமல், அநுமானுடைய வால் உபயோகப்பட்டதா? நீங்களே சொல்லுங்கள்.

மதத்தையும் அரசியலையும் பிணைப்பதால்ஜனநாயக முறையில் வேலை செய்வதற்கு ஆபத்தேற்படுமென்று பார்லிமெண்டு பிரபுக் கள் சபையில் பிரபுக்கள் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவில் முன் ஒரு காலத்தில் பாதிரிகளுடைய அதிகாரம் மூர்த்தண்ணியமாக நடந்தது. எங்கும் வீசியிருந்த பாதிரி வலையை அறுத்தெறிந்த பிறகுதான் ஐரோப்பிய ஜனங்கள் சுயராஜ்யப் பாதையில் கால் வைக்க இடமுண்டாயிற்று. இது அனுமார் கடல் தாண்டின படலமல்ல? சரித்திர உண்மை. இப்பொழுது ஐரோப்பாவின் அனுபோகமான நிலைமை. இதைப் பார்த்து அரசியலையும் சமயத்

தயும் கலக்காதீர்களென்று உண்மைக்குப் பரிந்து பேசுகிறவர்கள் மதுநாட்டிலும் சொல்லுகிறார்கள், உயர்ந்த ஜாதி யென்கிற ஒரு கூட்டமுழுதும் சேர்ந்து ஒரு குறுகிய நோக்கத்திற்குத் தங்களைப் பயிற்சி செய்துகொண்டிருக்கிறது. அதையே தளராமல் காத்து அதற்கு உண்மை செலுத்த வேண்டுமென்று போதனை செய்து கொண்டே யிருக்கிறது. இதுவே இலாபமென்பதைத் தெரிந்து கொண்டு பத்திரிகைகளையும் பள்ளிக்கூடப் புத்தகங்களையும் கோவில் ஆசார ஆராதனையைக்கூட இந்த நோக்கத்திற்குப் பயன் படுத்திக்கொண்டு வருகின்றார்கள். இவைகள் சுயஜாதி கர்வமும் பிற ஜாதி தாழ்மையும் உண்டாக்குகின்றன. உலகப் பொது விதிக்கு விரோதமான இந்த அற்பக்கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துப் பேசுவோரைத் தேசத்துரோகி, சமய விரோதி, தெய்வ நிந்தகன் என்கிறார்கள்.

இராமராச்சியம் நியாயமானதா?

அவர்கள் சொல்லும் இராமராஜ்யம் இராமரைத் தெய்வமாகச் சொல்கிறவர்கட்குக்கூட நியாயமானதாகத் தோன்றுவதில்லையே? ஒரு அரசன் பதினாயிரம் பெண்களைக் கலியாணம் செய்துகொண்டு அதில் ஒரு பெண் பேரிலுள்ள ஆசையால் அவள் மகனுக்குப் பட்டங் தருவதாக வாக்களித்து முதல் மகனைக் காட்டிற்குப் போகச் சொல்லி இளைய பிள்ளைக்குப் பட்டம் கொடுத்தான். மூத்த பிள்ளை பெண்ஜாதியுடன் காட்டுக்குப் போனான். போன விடத்தில் பெண்சாதியை ஒருவன் தூக்கிக்கொண்டு போனான். அவனை ஜெயித்துப் பெண்சாதியை மீட்டுத் தகப்பன் சொன்ன வாய்தா தீர்ந்து தன ராஜ்யம் வந்து பட்டம் கட்டிக்கொண்டான். இப்படி இருக்கையில் அயோத்தி வண்ணான் வண்ணாத்தி சண்டையில் வண்ணாத்தி அயல் வீடு போயிருந்து மறுநாள் வர, பதினான்கு வருஷம் பொறுத்து இராமர் சேர்த்துக்கொண்டதுபோல நான் சேர்த்துக்கொள்ளமாட்டேன் என்று வண்ணான் மறுக்க, அதைக் கேட்டு இராமர் கர்ப்பத்துடனிருந்த சீதையை காட்டிற்குக் கொண்டுபோய் விட்டுவிடும்படியாக இலட்சுமணருக்குச் சொல்ல, இலட்சுமணர் சீதையைக் காட்டில் கொண்டுபோய் விட்டார். அங்கே குசலன் பிறந்தான், வால்மீகியால் லவன் உண்டாக்கப்பட்

டான். இரண்டுபேரும் சேர்ந்து அஸ்வமேதயாகத்தில் இராம இலட்சுமணர் அனுமான் விபீஷணர் முதலியவர்களை யெல்லாம் கொல்லுகிறார்கள்; பின் உயிர்பெற்று எழுகிறார்கள்; பின் இராமர் இலட்சுமணர் சீதை முதலியவர்கள் அக்கினிக்குள்ளும் பூமிக்குள்ளும் நதிக்குள்ளும் போய் வைகுண்டம் சேர்ந்தார்கள். அனுமார் பக்தகோடிகளுக்கெல்லாம் வேண்டியதைச் செய்துகொண்டிருக்கிறார். இவ்வளவுதான் இராமாயணக் கதை. இந்தக் கதையால் நாம் தெரிந்துகொள்வதென்ன? அதனால் நமக்கு ஆவதென்ன? ஆனதென்ன?

பிராமணர்களின் மதச் சூதான ஏமாற்றுகளையும், எல்லாம் தங்களுக்கே உரித்தானதென்கிற ஆசைகளையும், அதை நிறைவேற்றிக் கொள்ளச் செய்துவந்த ஏற்பாடுகளும், தந்திர ஏமாற்றுதலும் கண்ட அறிவாளிகளில், படித்தவர்களில், ஆலோசித்துப் பார்த்தவர்களில், யார் பிராமணர்களைக் குற்றம் சொல்லாமலிருந்தார்கள்? எல்லோரும்தான் குற்றம் சொன்னார்கள். ஆரிய சமாஜம், பிர்ம சமாஜம் உண்டாவதற்குக் காரணமென்ன? வேதத்திலுள்ள கர்மபாகத்தைத் தள்ளி அவர்கள் பிரிந்து நிற்கப் பிராமணக் கொடுமைதானே காரணம்? பிர்மஞானமும் விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாதென்று முன்பு பிராமணர்கள் ஏட்டில் எழுதித் தெய்வ கட்டளை என்று விதி போட்டுத் தமது ஸ்தானத்தைக் கெட்டிப்படுத்திக் கொண்டார்கள். அது புறத்தை ஒடுக்கு முன்பு ஜனங்களின் அறிவை ஒடுக்கிவிட்டது என்பது உண்மையல்லவா? அறிவின் வேர்களைச் சூத்திரரென்னப் பட்டவர்களிடமிருந்து பறித்து விட்டபடியால் இவர்கள் சுவதந்திர காரியம் செய்யச் சாத்தியப்படவில்லை என்பது பிரத்தியட்சம்தானே?

வேதத்தின்பேரால் கொடுமை

வேதங்கள் அபௌருஷேயம் என்றல்லவோ சொல்லப்படுகிறது! மனிதனால் எழுதப்பட்டவையல்ல, கடவுளால் சொல்லி பிராமணர்களிடம் கொடுக்கப்பட்டதென்றல்லவா சொல்லப்படுகிறது! அந்த வேதங்களில் உயர்ந்த கொள்கைகளும் தத்துவங்களும் ஆராய்ச்சிகளும் இருக்கின்றதென்றுதானே சொல்லுகிறார்கள். அப்படி இருக்க முட்டாள்தனமான கொள்கைகளும் மூட

ம்பிக்கைகளும் வித்தியாசமான ஏற்பாடுகளும் கல்நெஞ்சும் கரையக்கூடிய கொடுமைகளும் வேதத்தின் பேரால் பரப்பப்பட்டிருக்கிறதே, இதற்குக் காரணம் யார்? அந்தச் சாஸ்திரத்திற்கு இந்த சாஸ்திரம் பிரமாணம், இந்த சாஸ்திரத்திற்கு அந்தச் சாஸ்திரம் பிரமாணம் எனக் கற்பித்து அதைவிட்டால் பாவம், இதைச் செய்யாவிட்டால்நரகம் என்று பயமுறுத்தி, தோஷம் கருமாந்திரம் கல்லெடுப்பிலிருந்து எல்லாம் எங்களுக்கே கொடுங்கள்? அதில் தான் புண்ணியம் என்று சொல்லிப் பிழைப்பதில்தானு பிராமண ஜாதி உயர்ந்தது? மதத்தின் ஆதீனம், ஆசாரத்வம், புரோகிதம், ராஜ சபையில் புரோகிதனிருந்து ஆலோசனை சொல்லுவது முதலிய பெரிய தனங்களெல்லாம் பிராமணர்களிடம்தானே இருந்தது. அப்பர் சுவாமிகளைக்கூட இனியும் சூத்திரனுகத்தானே மதிக்கிருர்கள்! அப்பர் சுவாமியின் ஊர்வலத்திற்குப் பின்னுல் வேதம் சொல்ல மறுப்பார்கள். ஒரு ரூபாய் அதிகம் கூலி கொடுத்தால் சிறிது தூரம் நின்று சில இடத்தில் வேதம் சொல்லுவார்கள். அப்பர் சுவாமிகளுக்கு வயது 80. திருஞான சம்பந்தருக்கு வயது 16. இரண்டு பேரும் சந்தித்த சமயம் அப்பர் சுவாமிகள் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரம் பண்ணினுர். திருஞான சம்பந்தர் வாரி அணைத்து எடுத்தார் என்பதுதானே கதை! ஆச்சாரிகளின் சமத்துவம் அதில் விளங்குவதைப் பார்த்தீர்களா? அப்பர் சுவாமிகளின் பாட்டைக் கேட்டு என்னப்பன் என்னைப் பாடினுர் என்றும், திருஞானசம்பந்தர் சுவாமிகளின் பாட்டைக் கேட்டு ஞான சம்பந்தர் தன்னைப் பாடிக்கொண்டான் என்றும் சொன்ன சிவ பெருமானின் கோவில் பொற்கதவு அப்பர் பாட்டிற்குத் திறக்க வில்லை; திருஞான சம்பந்தர் பாட்டிற்குத் திறந்தது என்றுதானே சொல்லுகிருர்கள். முப்புரி நூலணிந்து தெய்வங்களெல்லாம் பிராமணச் சாதித் திருமேனியாகவல்லவோ விளங்குகிறது. சிவன் கோவில்களில் தீபாராதனைக்குப் பின்னுல்தான் தேவார திருவாசகங்கள் பாடவேண்டும். அதைப் பிராமணர்கள் கேட்கமாட்டார்கள். பண்டாரப் பாட்டென்பார்கள். சூத்திர பாஷையில் மந்திரம் கேட்கப்படாதாம். அதனுல்தான் தீபாராதனைக்குப் பின்னுல் பாட ஏற்பாடாயிருக்கிறது. எத்தனையோ அசம்பாவிதமான நமது தேசத்துப் புராதன சரித்திரமாகிய சோக நாடகத்தை எழுத இடமில்லை. எத்தனையோ தேசியம் தோன்றி அநேக காரி

யங்களைச் செய்திருக்கிறது. சில தேசங்களில் கற்பனைக் கதைக மிருக்கின்றன. அந்தத் தேசங்களின் தேசிய கர்த்தாக்கள் இதை போன்ற கதைகளைச் சொல்லிக் காரியத்தை நடத்தின தேசியத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா?

வடதேசத்து ஒரு ராஜ குடும்பத்தில பங்காளிகள் அடித்துக் கொண்ட கதை பாரதம். வடதேசத்து ஒரு ராஜ குடும்பத்தில் மூத்தாள் இளையாள் பிள்ளைகள் பட்டத் தகராறில் மூத்தாள் மகன் பெண்ஜாதியுடன் காட்டிற்குவர, பெண்ஜாதியைத் தென் தேசத்து அரசன் அபகரித்துக் கொண்டுபோக, அதனால் உண் டான கதை இராமாயணம். இதைக் கதையாகச் சொல்லிக் காவிய மாக எழுதித் தேவனென்றும் இராட்சதனென்றும், வானரங்களென் றும், தெய்வ அவதாரங்களென்றும் கற்பனையால் அலங்கரித்து அதிலொரு விஷ்ணு இராமன்; இதிலொரு விஷ்ணு கிருஷ்ணன்; இவர்கள் இரண்டுபேரும் தருமத்தைநிலைநிறுத்தப், பிராமணர்களைப் பூசித்து பிராமணர்களுக்குத் தான தருமம் செய்துகொண்டு வந்தார்களென்றும் வர்ணித்து இதற்கு இதிகாசமென்று பெயர் சூட்டித் தென்தேசத்தானை அடிமை கொள்ள வடதேசத்துப் பண்டிதர்களும் பிரசாரகர்களும் செய்த வஞ்சனை என்பதுஉங்க ளுக்கும் தெரியும். அதில் கண்ட பலன் போகாமலிருப்பதற்குத் தானே தேசியத்தில் அனுமானும் கிருஷ்ணனும் வந்து புகுந்து கொள்ளுகிறார்கள்.

பஞ்சவர் பிறப்பு

பஞ்சபாண்டவர்களும் துரியோதனாதிகளும் கதையின் வழி பார்த்தால் பிறந்து இருக்கமுடியாது. எப்படி எனில் சிறு வயதுக் குந்திக்கு ஒரு ரிஷியால் கொடுக்கப்பட்ட மந்திரம் ஐந்து. அதில் சூரிய மந்திரமான முதல் மந்திரத்தை குந்தி ஜெபித்தவுடன் சூரியன் வந்து குந்தி கன்னிகையாக விருக்கையிலேயே கூட, கர்ணனைப் பெற்றாள். இரண்டாவது மந்திரம் நமது உயிரை யெல்லாம் எம பட்டணத்தில் விசாரணை செய்யும் எமதர்ம ராஜா மந்திரம். அதைக் குந்தி ஜெபித்தவுடன் எம பட்டணத்திலிருந்து எமதர்ம ராஜா பூலோகத்திற்கு வந்து குந்தியைக்கூட, தருமனைப் பெற்றாள். மூன்றாவது மந்திரம் தேவேந்திரனுடையது. அதை

பித்த உடன் தேவேந்திரன் தெய்வலோகத்திலிருந்து இறங்கி து குந்தியைக் கூட, அர்ச்சுனனைப் பெற்ருள். குந்தி கர்ணனை றறில் விட்டுவிட்டாள். கர்ணன் போகத் தனக்கு மூன்று ஆண் குழந்தை இருப்பதால் இன்னொரு மந்திரத்தைத் தன் புருஷன் பாண்டுவின் இளைய பெண்ஜாதிக்குக் குந்தி கொடுத்தாள். கொடுக் கையில் அது பிளந்து இரண்டாய் விட்டது என்ருலும் அதை ஜெபிக்கையில் இரண்டு அஸ்வனி தேவர்கள் வந்து நகுலன் சகா தேவனை உண்டுபண்ணினர்கள். இதைக் கண்ட திருதராஷ்டிரன் பெண்ஜாதி காந்தாரி குழவிக் கல்லை எடுத்து வயிற்றில் இடித்துக் கொண்டாள். கர்ப்பமா யிருந்தபடியால் கர்ப்பம் கலைந்து உதிர மாய் வடிந்தது. வடிந்த இரத்தத்தை நூறு கலையத்திலும் வழித் தெடுத்த இரத்தத்தை ஒரு கலையத்திலும் பிடித்து வைத்தார்கள். நூறு கலையத்திலிருந்த இரத்தத்தில் துரியோதனுதிகள் நூறு பேரும், வழித்து வைத்த கலையத்திலிருந்து திரிசடை என்கிற பெண்ணும் பிறந்தார்கள்.

மனம் வெட்கப்படவில்லையே!

சூரியன், எமதர்மன், தேவேந்திரன், வாயு பகவான், அஸ்வனி தேவதைகள் இவர்களெல்லாம் ஒரு பெண்ணிடம் சேர்ந்து ஆறு குழந்தைகளை உண்டுபண்ணினர்களென்பதும், குழவிக் கல்லினல் கர்ப்பத்தை இடித்து அது கலைந்து ஒழுகினதிலிருந்து நூற்றொரு வர் பிறந்தார்களென்றும் ஒரு இராட்சதப் பெண்ணிடம் ஒரு குரங்கு வாயுபகவான் சிவபெருமான் இவர்களெல்லாம் சேர்ந்து அனுமானைப் பெற்ருர்களென்றும் சொல்லப்பட்ட கதைகளை எம். எ; எம். எல். படித்து உலகமெல்லாம் சுற்றி மந்திரியாகவு மிருந்த இராமநாதன் அவர்கள் நம்பிப் பேசுவதில்லைத்தான். ஒப்பந்தப்படி பாட்டுக்கு ஒத்த பக்கமேளம் கொட்டித்தானே ஆகவேண்டும் என்ருலும் மனம், வெட்கப்படவில்லையே! சொன்னது தவருர், அற்ப லாபத்திற்காகப்பிறரை வஞ்சித்தல் இகழ்ச்சி என்று கொள்வர். போரிலும் மானங் கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வர். அப்பேற்பட்ட மரபென் றல்லவா திராவிடர்கள் சொல்லப்படுகிருர்கள். அதற்கு வந்த அனியைப் போக்கவும் மூட பக்தியிலிருந்து மீட்கவுந்தான் பெரி

யார் உழைப்பெல்லாம். அதைத் தடுக்க நீங்களேன் கச்சை வ... கட்டி இராமாயணக் காலத்தை எடுத்துக்கொண்டு வந்திருக்... கள்? இராமாயணத்தைத் தாங்கள் கவனித்துப் படித்திருப்பீ... ளென்றே நினைக்கிறேன்.

தேசியத்தில் இராமாயணத்தையும் பாரதத்தையும் புகுத்திப் பேசுவது எதற்காக? எழுந்து நிற்க விரும்பும் வீழ்ந்த ஜாதியாரை மேலெழாதபடி அழுத்துவதற்குத்தானே! ஆலோசனையில்லாத மனித ஜாதிப் பகுதிகளின் பலவீனத்தையே தனக்கு க்ஷேமமாகக் கணிப்பதும் தம்மைக் காட்டிலும் புத்தியில் பலக் குறைவான ஜாதியாருக்கு வலது கையாலே இராமாயண பாரதத்தைச்சொல்லி இடது கையாலே அடிமைப்படுத்திக் கொள்ளையடிப்பதும்தானே அநேக கால அநுபோகம். இந்த ஏமாற்றுக்கு முழங்கால் படியிடலாகாது. இந்த ராஜதந்திர தேசியம் வெட்கங்கெட்ட பொய்களைக் கொண்டு நடக்கிறது. மனிதனுடைய சமாதானத்திலும் பொதுச் சகோதரத் தன்மையிலும் நல்லெண்ண மிருப்பதாகப் பேசும் என்னெய் தடவின பொய்களையே பெருமையாகச் சொல்லுகிறது என்று பெரியார் எங்களுக்குச் சொல்லுகிறார். நாங்களும் ஆலோசித்துப் பார்க்கிறோம். ஐரோப்பா தனது ராஜ்ய அமானுஷியத் தன்மையை கைவிட மனமில்லர்விட்டாலும் அதற்குச் சார்பான சித்தவிர்த்திகளைக் கைவிட இசைந்துவிட்டது என்றாலும், மனித இரத்தத்தை உறிஞ்சித் தின்னும் ஆச்சாரி கூட்டம் பிராமணனை வணங்கித் தருமத்தைக் காக்க அவர்களுக்கே தான தருமங் கொடுக்க வேண்டும் என்கிற பொய்க் கதைகளிலுள்ள சித்த விருத்திகளை விடாமல் அனுமான் இராமர் தருமர் முதலியவர்களைத் தேசியப் பிரசாரத்திலும் தேசியப் பத்திரிகைகளிலும் புகுத்திக்கொண்டே வருகிறார்கள். இதைக் கவனிக்கையில் பெரியார் சொல்லுவது சரியென்றே அநேகர் நினைக்கிறார்கள்.

உபமானம் சரியா?

உலகமெல்லாம் நடந்துவரும் தேசியமும் நமக்கு வேண்டிய தேசியமும் இராமர், அனுமார், தருமர், கிருஷ்ணர், இவர்கட்குத் தெரியாதா? புத்திமானுக்குப் புத்திமான், வீரனுக்கு வீரன், கல்விக்குக் கல்வி, அழகுக்கு அழகு அல்லவோ உபமானம் காட்டு

வழக்கம். அதுபோல் தேசியத்திற்கு தேசியத்தைத் உபமா காட்டவேண்டும். தேசியத்திற்கு, தேசியத்திற்கு விரோத நடந்த இராமர் தருமர் அனுமாரைக் காட்டினால் இது தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் அடிமை கொண்ட வழிக்குச் செலுத்தும் ஏற்பாடல்லவா? சூதாடி ராஜ்யத்தையும் பெண்ஜாதியையும் தோற்று, வில்லாதி வில்லர்கள் துரோணாச்சாரி, கிருபாச்சாரி அஸ்வத்தாம ஆச்சாரி எல்லோரும் நிறைந்திருந்த ராஜசபையில் ஜெயித்தவன், தருமர் பெண்ஜாதியின் துகிலை உரியவும், அதைப் பார்த்து எல்லோரும் சும்மாயிருக்கவும், அதற்காக மயிர் விரித்து, பன்னிரெண்டு வருடம் காட்டில் திரிந்த தருமரின் தேசியம் நமக்கு எப்படி உபயோகப்படும்? வாலியின் மந்திரி அனுமான், தம்பி சுக்கிரீவனுடன் சேர்ந்து தன் ராஜாவான வாலியைக் கொன்ற அனுமார் தேசியம் நமக்கு எதற்கு? குளித்துக் கொண்டிருக்கின்ற பெண்களின் சேலைகளை எடுத்து மரமேறி உட்கார்ந்துகொண்டு நிர்வாணமாக இருந்து இரண்டு கைகளையும் தலைக்குமேல் சேர்த்துக் கும்பிட்டால் சேலைகளைக் கொடுப்பேன் என்பதும், வழியில் போகிற பெண்களை மானபங்கம் செய்வதும் ஒரு பெண்ணின் புருஷனைப்போல் வேஷம்போட்டு அவள் கற்பைக் கெடுப்பதும் இவைகளை யெல்லாம் பரமாத்மாவின் லீலாவினோதமென்று புஸ்தகத்திலெழுதி பக்தி என்று பரப்பி, பாடம் சொல்லி அதைக் கேட்டு இந்த ராஜாக்களும் பல பெண்களைச் சேர்த்து லீலாவினோதம் செய்து அன்னியர் படையெடுப்பில் பட்டு மடிந்து பாழான இந்த தேசக் கிருஷ்ணனின் தேசியம் ஏமாற்றுப் பிழைப்பிற்கு ஆகுமேயல்லாமல் மற்றெதற்காவது உதவுமா?

இருபதாம் நூற்றாண்டின் நூதன சாஸ்திரத்தினுடனும் சாஸ்திரிகர்களுடனும் வேலையாளருடனும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டத்தவர்களுடனும் சமநடையாகச் செல்ல வேண்டியதுதானே நமது தேசியம்! இந்தத் தேசியத்திற்குச், சென்றுவிட்ட காலத்து விதிகளையும் சம்பிரதாயங்களையும் ஏமாற்றுக்களையும் குறுகிய மனதில் கொண்டுவந்தால் தேசியம் சித்திக்காது என்பதே பெரியார் கருத்து. அந்த உண்மையான சத்தியம் விளங்கியே தீரவேண்டும். முன்னே செல்லவேண்டியவன் பின்னே பார்த்த படியே நடந்து சென்றால் குறித்த இடத்திற்கு போய்ச் சேருவானா?

:(o):

பரிமளம் பதிப்பகம்
★ காஞ்சீபுரம் ★

Cover Printed at D. P. Works, Mannadu, Madras.